வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.02.2022 திங்கட்கிழமை | இதழ் : 78 | பக்கங்கள் : 16

வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை உட்பட 8 மாவட்டங்களின்

## நிர்வாக எல்லைகளின் அதிகாரங்கள் மகாவலி அதிகார சபை வசமாகிறது?

கொழும்பு, பெப். 21

மகாவலி அதிகார சபையின் அதிகார எல்லையினுள் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களை செயல்படுத்துதல் தொடர்பில் நீர்ப்பாசன அமைச்சரும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாடலுக்கு எட்டு மாவட்ட செயலாளர்களுக்கு அவசர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, பதுளை, நுவரெலியா, ஆகிய எட்டு மாவட்டங்

15

## பிரதிநிதிகளை மீள அழைக்கும் சட்டத்தை உருவாக்க வேண்டும்!

### தேர்தல்கள் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 21

மக்கள் ஆணைக்கு முரணாக செயற்படும் மக்கள் பிரதிநிதிகளை மீள அழைக்கும் அதிகாரத்தை நாட்டு மக்களுக்கு வழங்கும் வகையிலான சட்டத்தை இயற்ற வேண்டும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் சட்டம் திருத்தம் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பிலான பாராளு

15

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டப் பேரணி

## கொட்டும் மழைக்கும் மத்தியில் நடந்தது



கிளிநொச்சி, பெப்ரவரி 21

**கிளிநொச்சியில் கொட்டும் மழையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.**

**இந்தப் பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டு டிப்போ சந்தியில் நிறைவடைந்தது.**

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் தொடர் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு 5 ஆண்டு நிறைவடைந்துள்ள நிலையில் இந்த போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த பேரணியில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மக்கள் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்

15

## மீனவர்கள் பிரச்னைகளை தீர்ப்பது அரசின் பொறுப்பு

### மைத்திரிபால சிறிசேன யாழில் தெரிவிப்பு



உடுப்பிட்டி, பெப். 21

“வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைக்கு தீர்வை பெற்றுக் கொடுக்க வேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பு”, என்று முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்த அவர் உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியானது ஏனைய கட்சிகளை விட சிறந்த கட்சி. எமது கட்சியில் சிறியவர்

15

## ஐ. நா. மனித உரிமைகள் அறிக்கையில் புதிதாக இரு விடயங்கள் உள்ளடக்கம்!

ஜெனிவா, பெப். 21

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளில் சட்டமா அதிபர் சுதந்திரமாக செயல்பட வேண்டும், அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பில் அரசு உறுதியளித்த திருத்தங்கள் இடம்பெறவில்லை என்ற விடயங்கள் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 17 பக்க அறிக்கையில் இலங்கைமீது மேலதிக குற்றச்

15

## இந்திய தேசிய நலன்களுக்கு எதிராக ஒருபோதும் துணைபோக மாட்டோம்!

### கஜேந்திரகுமார் எம். பி.

முல்லைத்தீவு, பெப். 21

“இந்தியாவின் தேசிய நலன்களுக்கும் - தேசிய பாதுகாப்புக்கும் தமிழர் தாயகத்தைப் பயன்படுத்துவதற்கு ஒருபோதும் நாம் துணைபோக மாட்டோம். மாறாக நாம் அத்தகைய நடவடிக்கைகளை எதிர்ப்போம்.

ஆனால், 13ஆவது திருத்தமும் ஒற்றையாட்சியும் இந்தியாவினுடையவை அல்ல. அது தமிழினத்துக்கு உரிய விடயங்கள் - ஈழத் தமிழர்களுக்கு உரியவை. அந்த விடயங்கள் சம்பந்தமாக முடிவெடுக்கும் விடயம் இந்த இனத்துக்கு மட்டுமே



உள்ளது.”, என்று என்று தமிழ்த் தேசிய மக்கள்

15

## 16 ஆயிரத்தை எட்டுகிறது கொரோனா பலி!

கொழும்பு, பெப். 21

நாட்டில் கோவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்தை அண்மித்துள்ளது. நேற்று முன்தினம் தொற்றால் உயிரிழந்த 25 பேருடன் நாட்டில் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 994ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 30 - 59 வயது பிரிவில் 4 ஆண்கள், 8 பெண்கள் என 12 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 4 ஆண்கள், 9 பெண்கள் என 13 பேருமாக 25 உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

அமெரிக்காவில் மிகப்பெரிய வக்கீலாக இருந்த ஒருவரின் தாயாரை தொலைக்காட்சி நிலையம் ஒன்று பேட்டி கண்டது.

அந்தப் பேட்டியை நடத்தியவர் அவரிடம் முதலாவதாகக் கேட்டது, "உங்கள் மகன் இப்படி பெரிய வக்கீலாக வருவான் என்று நீங்கள் எப்போதாவது நினைத்ததுண்டா?" என்று.

அதற்கு அந்தத் தாயார் கூறினார்,

"ஆமாம். அவனுக்கு ஏழு வயது இருக்கும்போது நடந்த ஒரு நிகழ்வில் அவன் வக்கீல் ஆவதற்கான சாத்தியம் இருப்பதாக நான் அப்பொழுதே கணித்து விட்டேன்." என்று.

"அப்படி என்ன நிகழ்வு நடந்தது...?" என்று கேட்டார் பேட்டியாளர்.

அதற்கு அந்த தாயார் சொன்னார்,

"நான் ஒரு நாள் சமையலறையில் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவன் ஹோலில் பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தான். திடீரென்று பூனை, வீச்.. வீச்.. என்று சத்தம் போட்டது. நான் அவனிடம் சமையலறையிலிருந்து கொண்டு, 'பூனையின் வாலை பிடித்து இழுக்காதே என்று உன்னிடம் எத்தனை முறை சொல்லியிருக்கிறேன்.. பூனை இப்படி சத்தம் போடுகிறது' என்று அவனிடம் கேட்டேன்.

"அதற்கு அவன், 'நான் ஒன்றும் பூனை வாலை பிடித்து இழுக்கவில்லை, பூனைதான், அதன் வாலை அதுவே இழுத்துக் கொண்டிருக்கிறது' என்று கூறினான். எனக்கு ஒன்றும் புரியாததால் சமையலறையிலிருந்து வெளியில் வந்து பார்த்தபொழுது, ஒரு கணம் அதிர்ந்து போனேன். தனது சப்பாத்துக் காலால் எனது மகன், பூனைக்குட்டியின் வாலை மிதித்துக்கொண்டிருந்தான். அந்தப் பூனை அதன் வாலைப் பிடித்து இழுத்துக்கொண்டு கத்திக்கொண்டிருந்தது.

"இதைப் பார்த்தபோது, தவறு தன்மீது இருந்தும், தன்மீது தவறு இல்லாததுபோல் காட்டும் சாமர்த்தியத்தை பார்த்த போது, நான் எனது மகன் எதிர்காலத்தில் ஒரு வக்கீல் ஆவதற்கு சாத்தியம் இருப்பதாக அப்போதே கணித்துக் கொண்டேன்" என்று சிரித்தபடி கூறினார்.

இது யாரையும் குறித்துக் காட்டுவதற்காக சொன்ன கதையல்ல.

இனிச் சொல்லப்போகின்ற விசயத்திற்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லவே இல்லை. அப்படி இருப்பதாக இதற்குப் பின்னரும் நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பாத்திரவாளியல்ல.

அண்மையில் நடந்த மீனவர்களின் போராட்டம் தன்னால்தான் ஒழுங்குபடுத்தப்பட்டது என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தபோது, கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அதை விமர்சித்திருந்ததை வாசகர்கள் படித்திருப்பீர்கள்.

தனக்கு எதிராக தானே போராட்டம் நடத்துகின்ற அளவுக்கு அவர் பாவம் செய்தவர் என்றும், அவருக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுவதை அவரால் பொறுக்கமுடியாமல் அவர் ஏதேதோ பிதற்றிக்கொண்டிருக்கிறார். அதற்கெல்லாம் நாங்கள் பதில் சொல்லி அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. மக்கள் ஏன் போராடினார்கள் என்பது மக்களுக்கு தெரியும் என்றும் சுமந்திரன் தெரிவித்திருக்கிறார்.

அவர் பிதற்றுகிறார் என்றும் அதற்கெலல்லாம் பதில் சொல்லவேண்டியதில்லை என்றும் சொல்கின்ற அவர், பதிலையும் சொல்லிவிட்டு, தான் சொல்லவேண்டியதில்லை என்கிறார்.

தனக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்டு, அந்த விடயம் அனைவரின் கவனத்தையும் பெறுகின்றபோது, அதற்கு தீர்வு காண்பதும் ஒருவகையில் அரசியல்தான். அதற்கு தீர்வுகாணாவிட்டால் மக்கள் எழுச்சியை அடக்க முடியாமல் போய்விடும் என்று அரச தரப்பிற்கு காட்டுவதற்காகவும் அவர் செய்யலாம். ஆனால், அப்படியொரு வக்கீல் புத்தி அவருக்கு இருக்கும் என்று யாரும் நம்புவார்களா என்பது தெரியவில்லை.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதில் உலகின் அழுத்தம் இப்போது அதிகரித்திருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியம், அதனை நீக்காவிட்டால் ஜி. எஸ். பி. பிளஸ் சலுகையை இலங்கைக்கு வழங்கப்போவதில்லை என்று நிபந்தனை விதித்திருக்கின்றது. என்றுமில்லாதவாறு டொலர் பற்றாக்குறையால் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் இந்த நாட்டுக்கு, அந்நியச் செலாவணியைத் தேடித் தரும் ஆடைத்தொழில், ஐரோப்பிய ஒன்றியத்தின் சலுகையைப் பெறாவிட்டால் பெரும் நெருக்கடியைச் சந்திக்கும். இதனால் பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டிய நிலையில் அரசு இருக்கின்றது. அதனால்தான் அதற்கான திருத்தத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்திருக்கின்றது. அதிலுள்ள குறைகளை சரிசெய்து, அது திருத்தப்படுமானால், எங்கள் போராட்டத்தால்தான் அது நடந்தது என்று சொன்னால், அதனை நம்புவதற்கும் அப்பாவிகள் தயாராகத்தானே இருக்கின்றனர்.

அதுபோலத்தான் டக்ளஸும் நினைத்தாரோ தெரியவில்லை!

**- ஊர்க்குருவி**

# தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு முல்லைத்தீவில்!

*முல்லைத்தீவு, பெப். 21*

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2022ஆம் ஆண்டுக்கான தேசிய மாநாடு கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

"இரண்டு தேசங்கள் இணைந்த ஒரு நாடு என்ற அரசியல் தீர்வும், அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும், வலிந்து காணாமல் போகச் செய்யப்பட்டவர்கள் விவகாரத்தில் சர்வ தேச பக்கசர்பற்ற விசாரணை கோரி தொடர்ந்து போராடுவோம், இன அழிப்பு, போர் குற்றங்கள் தொடர்பில் முழுமையான சர்வதேச பக்கசார் பற்ற விசாரணை வேண்டும், போரின் பின்னரும் தொடர்ந்தும் கட்டமைப்பு சார் இன அழிப்பு செயல்பாடுகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும், எல்லைகள் மாற்றி அமைத்து பிரதேச மட்டத்தில் உள்ள நிர்வாக அலகுகளுக்கு தமிழர்களை சிறுபான்மையினர் ஆக்கும் முயற்சிகளை தடுத்து நிறுத்த போராடுவோம், தமிழ்த் தேசத்தின் கடல்சார் பொருளாதாரத்தை பாதுகாப்போம், தமிழர்தேச வரலாற்றை சிங்களமயமாக்க முயலும் சதிமுயற்சிகளை முறியடித்து செயலாற்ற வேண்டும்.

மலையக மக்களின் உரிமைகளுக்காக இணைந்து குரல் கொடுப்போம், கிராமிய உழைப்பாளர்கள் எதிர்நோக்கும் சமூகமாற்ற ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நாமும் இணைந்து குரல்கொடுப்போம், முன்னாள் போராளிகளையும் மக்களையும் வறுமையில் இருந்து பாதிப்புக்களில் இருந்தும் மீட்டெடுக்க உழைப்போம், சமூகசீரழிவுக்கு எதிராக போராடுவோம், போதைப் பொருள் பாவனை மற்றும் வன்முறை கலாசரத்திற்கு எதிராகப் போராடுவோம் என கட்சியின் கொள்கைப் பிரகடனம் இதன்போது வெளியிடப்பட்டது.



இந்த நிகழ்வில், தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன், கட்சியின் உபதலைவர் சுரேஷ், கட்சியின் முக்கியஸ்தர்களான சட்டத்தரணிகள் க. சுகாஸ், காண்டீபன், உள்ளிட்ட கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் இதில் பங்கேற்றனர். (ஐ)

# ரூபாயின் இருப்பிலும் நெருக்கடி நிலைமை!

## அமைச்சர் உதய கம்மன்பில்

*கொழும்பு, பெப். 21*

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் எரிபொருள் கொள்வனவுக்கு டொலர் நெருக்கடியை எதிர்க்கொண்டுள்ள நிலைமையில் தற்போது ரூபாய் இருப்புக்கும் நெருக்கடி நிலைமை தோற்றம் பெற்றுள்ளது என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருளின் விலையை அதிகரிக்காவிடின் எரிபொருள் கொள்வனவுக்கான ரூபாயை திரட்டிக்கொள்வதில் பாதிப்பு ஏற்படும். எரிபொருள் விநியோகத்தில் பெரும் நட்டத்தை கூட்டுத்தாபனம் எதிர்கொள்கிறது. எரிபொருள் விலை அதிகரிப்பு குறித்து இலங்கை



பெற்றோலிய கூட்டுத்தாபனம் பலமுறை கோரிக்கையை முன்வைத்துள்ளது.

தற்போதைய நிலைமையில் எரிபொருளின் விலையை அதிகரிக்காவிடின் எரிபொருள் இறக்குமதிக்கான ரூபாவை கூட திரட்டிக்கொள்ள முடியாத நிலைமை தோற்றம் பெறும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் கல்வி சாதனையாளர் விருது வழங்கல்!

*யாழ்ப்பாணம், பெப். 21*

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் (வை. எம். சி. ஏ.) நடத்திய கல்வி சாதனையாளர் விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை அந்த அமைப்பின் மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் ஜி டி நைல்ஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், வட மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ், யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து. இராதா கிருஷ்ணன், கனடா வெஸ்ரேண் தமிழ்ப் பாடசாலைகள் அமைப்பாளர் ஜே.வில்வராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

அருட்தந்தை டேனியல் ஜெயரூபனின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற விருது வழங்கும்




நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக "இணையவழிக் கல்வி மாணவர்களுக்கு நன்மையை விளைவிக்கிறதா - தீமையை விளைவிக்கிறதா" என்ற பட்டிமண்டபம் இடம்பெற்றது. கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்களும் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களும் விவாத அரங்கில் பங்கேற்றனர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் நடுவராக செயல்பட்டார்.

கிறிஸ்தவ வாலிபர் சங்கம் யாழ்ப்பாணத்தில் 1890ஆம் ஆண்டில் அப்போது அரசாங்க அதிபராக இருந்த சேர் வில்லியம் ட்றைமன் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
21.02.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 09

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# இந்தியத் தூதுவருடன் பேசுதல்?

இந்திய தூதுவர் கோபால் பாக்லேயை சம்பந்தன் சந்தித்து பேசியிருக்கின்றார். வழமைபோலவே அங்கு சம்பந்தன் ஆணித்தரமாக பேசினார் என்றவாறான செய்திகள், கசியவிடப்பட்டிருக்கின்றன. உண்மையில் சம்பந்தன் இந்திய தூதரகத்திற்கு செல்வதில் விசித்திரங்கள் எதுவுமில்லை. இது சாதாரணமான ஒன்று. இவ்வாறான சந்திப்புக்கள் சம்பந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இடம்பெறுவதுண்டு. இந்திய தூதரகம் எப்போதாவதுதான் சம்பந்தனையும் கூட்டமைப்பையும் அழைப்பதுண்டு. ஆனால், சந்திப்புக்கள் முடிந்ததும் வழமைபோல் இந்தியா தங்களை அழைத்து பேசியது போன்றே கதைகள் சொல்லப்படுவதுண்டு.

இந்த மாதம் இறுதியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் கொழும்பு வரவுள்ளார் என்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதேபோன்று, இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை வரவுள்ளதான செய்திகளும் வெளிவந்திருக்கின்றன. இந்த நிலையில்தான் சம்பந்தன், தனது முன்னைய தவறுகளை சரிசெய்யும் நோக்கில் இந்திய தூதுவரை சந்திருக்கின்றார். ஏனெனில், இந்திய பிரதமரை சந்திப்பதற்கான வாய்ப்பு கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட போதும், அதனை சம்பந்தன் தட்டிக் கழித்திருந்தார். இதனை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கடுமையாக ஆட்சேபித்திருந்தன. தூதரகத்திடமும் முறையிட்டிருந்தன. இதன் பின்னர் தனது தவறை சமாளிக்கும் வகையில், பஸில் ராஜபக்ஷ புதுடில்லியில் நிற்கும்போது இந்த அழைப்பு வந்த காரணத்தால்தான், நான் இதனை பிற்போட்டேன் – ஏனெனில், இந்தியாவுக்கு சங்கடங்களை ஏற்படுத்த நான் விரும்பவில்லை – என்றவாறு தூதுவருக்கு கதை சொல்ல முற்பட்டிருக்கின்றார். ஆனால், இதன்போது – இந்தியாவுக்கு யாரை எவ்வாறு கையாள வேண்டுமென்று தெரியுமென்று கூறி, சம்பந்தனின் வாயை தூதுவர் அடைத்திருந்தார். இதன்போது ஏனைய கட்சிகளின் தலைவர்களும் இருந்தனர்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு மிகவும் தெளிவானது. இதனை அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சுட்டிக் காட்டி வந்திருக்கின்றனர். அந்த நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக் கொள்ளப்போவதில்லை. இந்த விடயங்கள் சம்பந்தனுக்கு தெரியாத விடயங்களுமல்ல. ஆனாலும் உண்மை நிலையை மக்களுக்கு சொல்லி, விடயங்களை முன்னெடுக்கும் அரசியல் தற்துணிவுடன் சம்பந்தன் இல்லை.

அதேவேளை – மிகவும் உடல் ரீதியில் தளர்ந்திருக்கும் சம்பந்தனை முன்னிலைப்படுத்தக்கூடிய நிலையிலும் இந்தியா இருப்பதாகத் தெரியவில்லை. பல இலட்சக் கணக்கான மக்களை திரட்டக்கூடிய ஒரு மக்கள் சக்திமிக்க தலைவராக இருந்தால், சம்பந்தன் ஆணித்தரமாகப் பேச முடியும். அதேவேளை, இந்தியாவை தவிர்த்து, பிறிதோர் இந்திய எதிர்ப்பு சக்தியுடன் கைகோக்கக் கூடிய மக்கள் செல்வாக்குமிக்க தலைவராக இருந்தாலும்கூட, இந்தியா சற்று யோசிக்க இடமுண்டு. ஆனால், சம்பந்தனோ தூதரகங்களை நம்பியிருக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மட்டும்தான். எனவே சம்பந்தனால் ஒருபோதும் இராஜதந்திர தரப்புக்களிடம் குரலை உயர்த்த முடியாது. இந்திய இராஜதந்திரிகளுக்கும், கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பொன்றில், சம்பந்தன் மேசையில் தட்டிப் பேசிய போது, அங்கிருந்த முக்கியமான ஒருவர், இப்படி கூறியிருக்கின்றார். “மிஸ்டர் சம்பந்தன் இது உங்களுடைய கட்சிக் கூட்டமல்ல”,– சம்பந்தன் கடந்த பன்னிரெண்டு வருடங்களாக மேசையில் தட்டிப் பேசி எதுவும் நடக்கவில்லை. இனியும் எதுவும் சம்பந்தனால் முடியாது.

இந்த நிலையில்தான், அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச்சட்டத்தை கூட பாதுகாக்க முடியுமா என்னும் கேள்வி எழுந்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில்தான் ஆறு கட்சிகள் இணைந்து இந்திய பிரதமரின் தலையீட்டை கோரியிருந்தன. ஒருவேளை இந்தியா, (தமிழர்களை நடுவீதியில் இந்தியா விட்டுவிடாது என்னும் நம்பிக்கைக்கு அப்பால்) 13 விடயத்தில் அமைதியாக இருந்துவிட்டால் ஆட்சியாளர்கள் தாங்கள் நினைப்பதை சாதாரணமாக செய்து முடித்துவிடமுடியும். ஒரு பௌத்த சாசன அரசியல் யாப்பை கொண்டு வந்தால் சம்பந்தனால் என்ன செய்ய முடியும் – அப்போதும் தூதரங்களின் கதவுகளை தட்டுவதை தவிர?

# வடக்கு - கிழக்கு தமிழர்மீது அனுதாபம் கொண்டிருந்த இரு திரையுலக நட்சத்திரங்கள்

அலசுவது இராஜதந்திரி

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் அரசியல் ரீதியாக வடக்கு - கிழக்கு தமிழர்களின் தனித்துவங்கள் நன்கு திட்டமிட்ட முறையில் ஒடுக்கப்பட்டு வந்ததையடுத்தே நாளடைவில் தீவிரவாதம் தலையெடுத்து ஆயுதப்போராட்டம் வெடித்திருந்தது.

ஆயுதப் போராட்டத்தைப் பொறுத்தவரை தமிழர்களின் நியாயமான அரசியல் அபிலாஷைகளை அனுதாபக் கண்கொண்டு அன்றைய தமிழக முதலமைச்சரும் தமிழ் திரையுலக நட்சத்திரமுமான எம். ஜி. இராமச்சந்திரன் (எம். ஜி. ஆர்.) நோக்கியிருந்தார்.

இதேவேளை இலங்கையில் வடக்கு - கிழக்கில் ஆயுதப் போராட்டம் வெடித்திருந்தபோது தென்னிலங்கை அரசியல் தரப்பினர் தமிழ் ஆயுதப் போராளிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு முன்வராதிருந்த தருணத்தில் தாமாகவே முன்வந்து இந்தியாவிலும் பின்னர் இலங்கையிலும் தமிழ் ஆயுதப் போராளிகளை சந்தித்தவரே பிரபல சிங்கள திரையுலக நட்சத்திரமும் ஸ்ரீலங்கா மஹாஜன கட்சியின் தலைவருமான விஜய குமாரதுங்க என்பது குறிப்பிடத்தக்கது.

1983ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரம், அதனையடுத்து வடக்கு - கிழக்கில் தோற்றம் பெற ஆரம்பித்த தீவிரவாதம் என்பவற்றைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கிலிருந்து ஏராளமான மக்கள் இந்தியாவின் தமிழகம் நோக்கி அகதிகளாக சென்றிருந்தனர்.

அப்போது, தமிழக முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் வடக்கு - கிழக்கு தமிழர்களை மிகுந்த அனுதாபத்தோடு தமிழகத்தில் ஏற்றிருந்தார். வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கான அகதி முகாம்கள் தமிழகத்தில் தோற்றம் பெற்றது காலஞ்சென்ற தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடைய காலப்பகுதியிலேயாகும்.

வெறுமனே அகதிகள் என்று அவர்களை முடக்கிவிடாது இந்தியாவில் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளுக்கு உயர் கல்வி வாய்ப்புகளையும் எம். ஜி. இராமச்சந்திரன் வழங்கியிருந்தார்.

இதுதவிர, தமிழகத்தில் வடக்கு - கிழக்கு ஆயுதப் போராட்ட அமைப்புகள் தோற்றம் பெற ஆரம்பித்தபோது ஆயுதப் போராளிகளையும் அனுதாபக்கண்கொண்டு பாரத்தார் எம். ஜி.இராமச்சந்திரன். அத்துடன், அவர்கள் தமிழகத்தில் எவ்வித இடையூறுகளுமின்றி இயங்குவதையும் உறுதி செய்தார்.

குறிப்பாக, எண்பதுகளில் சென்னை பாண்டி பஜாரில் புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரன் ஆகியோர் ஒருவர் மீது ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டபோது அவர்கள் இருவரையும் சென்னை பொலிஸார் கைது செய்திருந்தனர். அச்சமயம் தமிழக முதலமைச்சராக இருந்த எம். ஜி. இராமச்சந்திரன் உமா மகேஸ்வரனையும், பிரபாகரனையும் எச்சரித்து விடுதலை செய்திருந்தார்.



எம். ஜி. இராமச்சந்திரன் உமா மகேஸ்வரன்மீதும் பிரபாகரன் மீதும் அனுதாபம் காட்டியிருக்காவிட்டால் அந்த இருவரும் அன்று நாடு கடத்தப்படும் சூழ்நிலைகள்கூட உருவாகியிருக்கும்.

இதுதவிர எம். ஜி. இராமச்சந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனுக்கு பெருமளவு நிதியுதவியும் வழங்கியிருந்தார்.

எம். ஜி. ஆர். இலங்கையில் பிறந்தவர். அத்துடன், இலங்கையில் தமிழ் ரசிகர்கள் மாத்திரமல்லாது ஏராளமான சிங்கள ரசிகர்களும் அவருக்கிருந்தனர். சிங்கள திரைப்பட நட்சத்திரங்கள் கூட எம். ஜி. இராமச்சந்திரன்மீது மிகுந்த நன்மதிப்பு வைத்திருந்தனர். எம். ஜி. ஆரை பெரிதும் நேசித்த சிங்கள திரைப்பட நட்சத்திரமே விஜய குமாரதுங்க.

திரையுலகில் மாத்திரமல்ல. அரசியலில்கூட எம். ஜி. ஆரை பின்பற்றியே காலடி எடுத்துவைத்தார் விஜய குமாரதுங்க. இருப்பினும் அவரின் அரசியல் வாழ்க்கை நீண்ட நாட்கள் நீடித்திருக்கவில்லை. அவரின் பிரபல்யத்தைக்கண்டு அஞ்சியோரால் விஜய குமாரதுங்க 34 ஆண்டுகளுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார்.


1988ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி விஜய குமாரதுங்க சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

அவரின் ரசிகையும் இலங்கையின் பிரபல அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவருமான சந்திரிகா பண்டாரநாயக்கவை விஜய குமாரதுங்க திருமணம் செய்திருந்தார். பின்னாளில் இலங்கையின் முதலாவது பெண் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாகவும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவாகியிருந்தார்.

விஜய குமாரதுங்க தம்பதியினரே முதலில் தமிழகத்தில் அடைக்கலம் புகுந்திருந்த

(15 ஆம் பக்கம் பார்க்க)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**பெப்ரவரி - 22 திங்கட்கிழமை**
**பிலவ வருடம் - மாசி 10**
**நல்ல நேரம் : 7.30 - 9.00**
**ராகு காலம் : 3.00 - 4.30**
**திதி : சஷ்டி**




**மேடம்**
குழந்தைகளை அரவணைத்து சென்று அவர்களின் அன்பை பெறுவீர்கள். சவாலான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். சலிப்பு நீங்கும். பெரிய பதவியில் உள்ளவர்களின் உதவியும், ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்**
நல்லவர் ஒருவர் உங்களுக்கு துணை நிற்பார். பணியாளர்கள் உயர்நிலைக்கு வருவார்கள். வேதனைகள் தீரும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் இன்று கவனம் செல்லும்.

**மிதுனம்**
உங்களால் பயனடைந்தவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள். பணியிடத்தில் முதலிடத்தைப் பிடிக்கும் முயற்சியில் இறங்குவீர்கள். மனதில் பலம் கூடும். வாழ்வில் புதிய பாடம் கற்பீர்கள்.

**கடகம்**
முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். பகைகள் விலகும். வியாபாரத்தை விரிவடையச் செய்வீர்கள். உங்களின் புகழ் கூடும். புதிய வாய்ப்பு கிடைப்பதால் உங்களது திறமையை நிரூபிப்பீர்கள்.

**சிம்மம்**
கோபத்தை வென்று மகிழ்வீர்கள். புதிய பொருள் வாங்குவீர்கள். பணியிடத்தில் உங்களது கை ஓங்கும். பதற்றத்தை ஏற்படுத்தும் விஷயத்தைக்கூட அமைதியாக கையாளுவீர்கள்.

**கன்னி**
எதிர்பாலின நட்பால் இன்று நன்மை உண்டாகும். மறதியை வெல்லுங்கள். வீண் செலவு குறையும். மனநிறைவு ஏற்படும். முயற்சியைப் பெருக்குவீர்கள். கடன் பிரச்னை கட்டுக்குள் இருக்கும்.

**துலாம்**
வெற்றி பெற எடுக்கும் முயற்சிகளில் பலன் கிடைக்கும். பேச்சின் மூலம் கூடுதல் நன்மை காண்பீர்கள். மகிழ்ச்சி கூடும். நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்று உணர்வீர்கள்.

**விருட்சிகம்**
மற்றவர் மீது குற்றம் காணும் குணத்தை விட்டு விடுங்கள். வாழ்க்கைக்கு பயன்படும் நல்ல விஷயம் ஒன்றைக் கற்பீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பில் ஆர்வம் கூடும்.

**தனுசு**
உங்களுக்கு ஆலோசனை தரக்கூடிய நல்லவர் ஒருவரின் உதவி கிடைக்கும். பணியாளர்களுக்கு நல்ல செய்தி வரும். பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள்.

**மகரம்**
மனதிற்கு பிடித்த விஷயங்கள் நடைபெறுவதால் மகிழ்ச்சி கூடும். பிறர் கூறும் நல்ல அறிவுரைகளை மனப்பூர்வமாக ஏற்று பயன்பெறுவீர்கள். கூடுதல் முயற்சியால் எடுத்த செயலில் வெற்றி பெறுவீர்கள்.

**கும்பம்**
நேற்று இருந்த பிரச்னைகள் இன்று முழுவதுமாக தீரும். நேரத்தை வீணடிக்கும் செயல்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்கள் பழிக்கும்படியான செயல்களை செய்யாதீர்கள்.

**மீனம்**
உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். நட்பு வட்டம் விரியும். உங்களது பணிகளை பொறுப்புடன் நிறைவேற்றுவீர்கள். சுபநிகழ்ச்சியில் சொந்தங்களின் சந்திப்பு நிகழ்ந்து மனதிற்கு ஆறுதல் தரும்.

# மீனவர்களை காக்க மத்திய அரசு இலங்கையுடன் பேச வேண்டும்

## ஜிகே வாசன் வலியுறுத்தல்

சென்னை, பெப் 21

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் இருந்து பாதுகாக்க மத்திய அரசு தனிக்கவனம் செலுத்த வேண்டும் என தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜிகே வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

"தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் போது அவர்களை இலங்கை கடற்படையினர் சிறைப்பிடிப்பதும், பல்வேறு விதத்தில் துன்புறுத்துவதும், படகுகளை, மீன்பிடிச்சாதனங்களை சேதப்படுத்துவதும் பல ஆண்டுகளாக நீடிப்பது மிகவும்



கவலைக்குரியது. வெள்ளிக் கிழமை நள்ளிரவில் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த நாகை மீனவர்களில் 6 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேலும் படகுகளையும் பறிமுதல் செய்துள்ளனர்.

இது மிகவும் கண்டிக்கத் தக்கது. இதனால் தமிழக மீனவக்குடும்பங்கள் துயரத்தில் இருக்கிறார்கள்.

அண்டை நாடான இலங்கை நாடும், அந்நாட்டு மக்களும் முன்னேற வேண்டும் என்று இந்தியா நினைத்து செயல்படும் அதே சமயம் இந்திய மீனவர்களின் மீன்பிடித் தொழிலையும் பாதுகாக்க அதிக கவனம் செலுத்த வேண்டும். அதாவது இந்தியா, இலங்கையோடு நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு இந்திய மீனவர்களுக்கு இனிமேல் இலங்கையால் எவ்வித பாதிப்பும் இருக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளும் வகையில் பேச வேண்டும். அதன் பின்னரே இலங்கையுடனான நட்புறவை தொடர்ந்து மேம்படுத்தலாம்." இவ்வாறு ஜிகே வாசன் தெரிவித்துள்ளார்.

# கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்பதற்கு தமிழக மீனவர்களையும் அனுமதிக்கவும்

## மத்திய அரசை வலியுறுத்தி ஓபிஎஸ் கடிதம்

சென்னை, பெப் 21

"கச்சத்தீவு திருவிழாவில் தமிழக மீனவர்களும், இலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் பக்தர்களையும் அனுமதிக்க இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்" என அதிமுக ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்.

இதில் அவர் கூறியிருப்பதாவது:

"ஆண்டுதோறும் கச்சத்தீவில் நடைபெறும் அந்தோணியார் தேவாலய



விழாவை இந்திய மக்களும், இலங்கை மக்களும் பல ஆண்டுகளாக இணைந்து கொண்டாடுவது வழக்கம். இந்நிலையில், இந்த ஆண்டு மார்ச் 11 மற்றும் 12ஆம் திகதி நடைபெறும் கச்சத்தீவு திருவிழாவில் பங்கு தந்தையர்களை மட்டுமே அனுமதிப்பது என்றும், தமிழகம் மற்றும் இலங்கையைச் சேர்ந்த பொது மக்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளது.

இது தமிழக மீனவர்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இந்த விவகாரத்தை தங்களது கவனத்துக்கு கொண்டு வருகிறேன். கச்சத்தீவு திருவிழாவில் தமிழக மீனவர்களும், இலங்கையைச் சேர்ந்தவர்கள் மற்றும் பக்தர்களையும் அனுமதிக்க இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்."

# தேர்தல் நியாயமாக நடக்கவில்லை

## வானதி சீனிவாசன்

சென்னை, பெப் 21

தேர்தல் நியாயமாக நடக்க மாநில தேர்தல் ஆணையம் கவனம் செலுத்தவில்லை என., பாஜக., எம்.எல்.ஏ., வானதி சீனிவாசம் குற்றம் சாட்டினார்.

வானதி சீனிவாசன் செய்தியாளர்களிடம் கூறும் போது, 'கடந்த சில நாட்களாக கோவையில் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் போன்றவற்றை அளித்துள்ளனர்.

பொதுமக்கள் அதையும் மீறி நல்லவர்களுக்கும், தூய்மையானவர்களுக்கும் வாக்களிப்பது என்பது மிகப்பெரிய சவாலாக உள்ளது. சில இடங்களில் வாக்காளர்கள், பிரச்சாரத்திற்கு சென்றவர்கள் மிரட்டப்பட்டனர்.

அத்துமீறலில் ஈடுபட்டவர்கள் மீது காவல்துறை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தேர்தல் ஆணையம் சரியான ஏற்பாடுகளை செய்யவில்லை. தேர்தல் ஆணையம் அரையும் அரையும் குறையுமாக சரியான ஏற்பாடு இல்லாமல் இந்த தேர்தலை நடத்துகிறது" எனத் தெரிவித்தார்.

# தேர்தல் முடிவிற்கு பின் மக்களை சந்திப்பேன்

## முதல்வர் ஸ்டாலின்



சென்னை, பெப் 21

உள்ளாட்சித் தேர்தல் பிரச்சாரத்தின் போது, நேரில் சென்று வாக்கு சேகரிக்காமல் காணொளி காட்சி மூலம் பிரச்சாரம் செய்தது ஏன் என்று முதல்வர் ஸ்டாலின் விளக்கமளித்துள்ளார்.

நாளை நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் முடிவு வரவுள்ள நிலையில், மிகப்பெரிய வெற்றியை திமுக., பெற உள்ளது. கொரோனா பரவல் காரணமாக அரசு விதிப்படி நேரடி பிரசாரம் செய்யவில்லை.

தேர்தல் முடிவுக்குப் பின், மாவட்டங்களில் நடைபெறும் வெற்றி விழாக்களில் பங்கேற்பேன். காணொளி வாயிலாக பேசியதை மக்களை சந்திக்க தைரியம் இல்லை என, கூறினார்கள்.

கொரோனா காரணமாக விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் காரணமாகவே காணொளி வாயிலாக பிரச்சாரம் மேற்கொண்டேன் என்றார். மேலும், தேர்தல் முடிவிற்குப் பின், மக்களை நேரில் சென்று சந்திப்பேன் என்றார்.



பத்திரிகைத் துறையில் 50 ஆண்டுகள் சேவையை கடந்த வடமராட்சியின் மூத்த பத்திரிகையாளர் சின்னத்துரை தில்லைநாதன் மைக்கலின் நேசக்கரம் அமைப்பால் நேற்று பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

# அரசின் குறைகளை நிவர்த்தித்து ஒன்றிணைந்து செயலாற்றுவோம்!

## அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா

வவுனியா, பெப். 21

**அரசாங்கத்திலிருந்து வெளியேறி தேவையற்ற அரசியல் நெருக்கடியை ஏற்படுத்த விரும்பவில்லை என்று தெரிவித்த தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா, அரசாங்கத்தின் குறைகளை நிவர்த்தி செய்து ஒன்றிணைந்து செயல்படவே எதிர்பார்த்துள்ளோம் என்றும் கூறினார்.**

ஹெப்பிற்றிகொலவையில் இடம்பெற்ற சுதந்திர கட்சியின் செயல்பாட்டு குழு கூட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னர் சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் ஒப்பந்தம் ஊடாக கூட்டணியமைத்தது. தேர்தல் இடம்பெற்று ஆட்சிக்கு வந்ததன் பின்னர் சுதந்திர கட்சி ஆற்றிய சேவை கவனத்தில் கொள்



ளப்படவில்லை.

கூட்டணி அரசாங்கம் என்ற ரீதியில் மிகுதியாக உள்ள காலப்பகுதியில் தவறுகளை திருத்திக்கொண்டு ஒன்றிணைந்து செயல்பட எதிர்பார்த்துள்ளோம்.

அரசியல் ரீதியில் அவசர தீர்மானங்களை முன்னெடுத்து அரசாங்கத்தையும், ஆதரவாளர்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்க முடியாது.

சுதந்திர கட்சியை விட்டு ஐக்கிய தேசிய கட்சியுடனும், மக்கள் விடுதலை முன்னணியுடனும் ஒன்றிணைய முடியாது. நாட்டை நிர்வகிக்கும் தகைமை மக்கள் விடுதலை முன்னணியினருக்கு கிடையாது - என்றும் சொன்னார். (ஐ)

# பாசையூரில் வெளிச்சவீடு அமைக்கும் பணி ஆரம்பம்!

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ்ப்பாணத்தின் புறநகர் பகுதியான பாசையூர் கடல் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட வெளிச்சவீடு அமைக்கும் செயல்பாடுகளை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன், கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கச்சதீவு திருவிழாவில் பக்தர்கள் அனுமதிப்பது தொடர்பில் ஊடகங்கள் கேள்வியெழுப்பியபோது இன்னும் சில தினங்களில் ஜனாதிபதியுடன் கதைத்து முடிவை அறிவிப்பேன் - என்றார். (ஐ)

# சஜித், விக்னேஸ்வரன் சுமந்திரனுடன் பேச்சு!

கொழும்பு, பெப். 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனுடன் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் பேச்சு நடத்தியுள்ளனர். அத்துடன், பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான போராட்டத்தில் அவர்களும் கையொப்பமிடுவர் என்றும் உறுதியளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இருவரும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தங்கள் ஆதரவு நிலைப்பாட்டைத் தெரிவித்தனர் என்று சுமந்திரன் எம். பி. தெரிவித் துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் இந்தக் கையெழுத்துப் போராட்டத்தில் இணைவர் என்று சஜித் பிரேமதாஸ உறுதியளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சி. வி. விக்னேஸ்வரன், பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்ற அடிப்படையில் சுமந்திரன் முன்னெடுத்து வரும் போராட்டத்தை பாராட்டியதோடு அதில் தானும் பங்கேற்க தயாராக உள்ளார் என்றும் கையொப்பமிடுவதற்கு எங்கு வருகை தர வேண்டும் என்று கேட்டார் என்று சுமந்திரன் எம். கூறினார். மேலும், இதற்கு தான், " நீங் கள் எங்கும் வருகை தர வேண் டிய அவசியமில்லை. அடுத்த வாரம் பாராளுமன்ற அமர்வு இருப்பதால் அங்கு வைத்து நீங் கள் கையொப்ப மிட முடியும்", என்று பதிலளித்தார் என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# செவிப்புலனற்றோர் நிறுவன ஆண்டு நிறைவு விழா!

வடமராட்சி, பெப். 21

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 14ஆம் ஆண்டு நிறைவு விழா நேற்று காலை அந்த நிறுவனத்தின் ஒன்றுகூடல் மண்டபத்தில் அதன் தலைவர் த. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

மங்கள விளக்குகளை விருந்தினர்கள் ஏற்றியதை தொடர்ந்து தலைமை உரையை தலைவர் த. செந்தில்குமார் நிகழ்த்தினார். தொடர்ந்து, கருத்துரைகளை இலங்கை தமிழ் செவிப்புலனற்றோர் அமைப்பின் தலைவர் கோ. வள்ளிகாந்தன், யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன், மாகாண சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் அகல்யா செகராசா, வட மாகாண விசேட கல்வித்திட்ட உதவி கல்வி பணிப்பாளர் வி.விஸ்ணுகரன் பலரும் ஆற்றினர். இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ - 2)





# போதையில் வாகனம் ஓட்டுவோருக்கு எதிராக வருகின்றது புதிய சட்டமூலம்!

கொழும்பு, பெப். 21

போதைப் பொருள் பயன்படுத்தி விட்டு வாகனங்களை செலுத்துபவர்களுக்கு எதிராக புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத சாரதிகளின் செயல்பாடுகள் காரணமாக வீதி விபத்துகள் அதிகரித்துள்ளது. இதனை கட்டுப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு 22 ஆயிரம் வாகன விபத்து சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 470 பேர் உயிரிழந்தனர். அத்துடன் குறித்த விபத்துகளில் 14 ஆயிரம் பேர் காயமடைந்தனர். நாளாந்தம் வாகன விபத்துகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

அதிகரித்து வரும் விபத்துகள் காரணமாக வீதிகளில் உடற்பயிற்சி செயல்பாடுகளில் ஈடுபடாமல் விளையாட்டு மைதானங்கள் மற்றும் நடைபாதை என்பவற்றை பயன்படுத்துமாறும் சிரேஷ்ட பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# பாராளுமன்றில் 8 பேருக்கு தொற்று

கொழும்பு, பெப்.21

பாராளுமன்றத்தில் பணியாற்றும் ஊழியர்களில் மேலும் எண்மருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் 30 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரி ஜென் பரிசோதனையிலேயே, எண்மருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், பாராளுமன்றத்தில் கடந்த வாரத்தில் மட்டும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான ஊழியர்களின் எண்ணிக்கை 100ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர்கள் 54 பேருக்கு இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கே)

# நாள்பட்ட நோய்க்கு இலக்கானோர் சிகிச்சை பெறுவது கட்டாயமானது

கொழும்பு, பெப். 21

நாள்பட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலைகளுக்கு செல்லாமல் வீடுகளிலேயே இருப்பது பாரதூரமானதாகும். இவ்வாறு சிகிச்சையின்றி இருப்பது அவர்களின் உயிருக்கும் அச்சுறுத்தலாக அமையக்கூடும் என்று விசேட மருத்துவ நிபுணர் மல்காந்தி கல்ஹேண தெரிவித்தார்.

வீட்டிலிருந்து சிகிக்சை பெறும் தொற்றாளர்களில் பெருமளவானோர் தொற்று அறிகுறிகளுடனேயே காணப்படுகின்றனர். ஒரு மாத்திரமின்றி வீட்டிலுள்ள ஏனைய உறுப்பினர்களும் இவ்வாறு தொற்று அறிகுறிகளுடனேயே காணப்படுகின்றனர்.

ஆரம்பத்தில் தொற்று அறிகுறிகள் தென்படாவிட்டாலும் நாளடைவில் பாரிய பாதிப்புக்கள் ஏற்படக் கூடும். குறிப்பாக மூன்றாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மோசமான நிலைமைக்கு தள்ளப்படக் கூடும்.

எனவே, இவ்வாறான நோயாளர்கள் குறைந்தளவிலான அறிகுறிகள் தென்படும்போது வைத்தியசாலைக்குச் சென்று மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

ஈழநாடு



### முன்னாள் அரசியல் கைதியிடம்

# மே 18 நாளில் நினைவுகூரப்பட்டோரின் விவரங்களைக் கோரினர் ரி. ஐ. டியினர்!

வவுனியா, பெப். 21

**வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதி ஒருவரிடம் கடந்த மே 18ஆம் திகதி அவரின் வீட்டில் யாரை நினைவேந்தல் செய்தீர்கள் என்ற பெயர் விவரங்களை பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினர் கோரியுள்ளனர்.**

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியொருவரிடமே பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் இந்த விவரங்கள் கோரப்பட்டன.

இது தொடர்பில் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவால் அவருக்கு வழங்கப்பட்ட கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"பயங்கரவாத விசாரணைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணை சம்பந்தமாக 2021.05.18 ஆம் திகதி இனப்படுகொலை தினத்தை நினைவூட்டும் முகமாக அந்தத் தினத்தில் விளக்கு வைத்து இறந்தவர்களுக்கு சமர்ப்பணம் செய்த காரணத்திற்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவுக்கு வாக்கு மூலம் வழங்கியபோது தமது குடும்ப அங்கத்தவர்களும், நெருங்கிய உறவினர்களும் யுத்தத்தின் மூலம் இறந்து விட்ட காரணத்திற்காகவே நான் இந்த தினத்தில் விளக்கேற்றி அவர்களுக்கு அஞ்சலி சமர்பணம் செய்தேன் என்று வாக்கு மூலம் கொடுத்து அவ் வாக்கு மூலத்தின் போது யுத்தத்தில் இறந்த குடும்பத்தினரதும், உறவினர்களினதும் விபரங்களை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு கையளிப்பேன் எனவும் கூறியிருந்தீர்கள்.

ஆகையால் அந்தப் பெயர் பட்டியலை 2022. 02. 22 ஆம் திகதிக்கு முன்பதாக வவுனியா வவுனியா பயங்கரவாத தடுப்பு விசாரணைப் பிரிவுக்கு இறந்து போனவர்களின் முழு விபரங்களையும் கையளிக்குமாறு தகவல் தருகின்றோம்", என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த மே 18 ஆம் திகதி குறித்த முன்னாள் அரசியல் கைதி தனது வீட்டில் இறந்தவர்கள் நினைவாக நீதிமன்ற கட்டளைகளை மீறாத வகையில் அஞ்சலிகளை தாம் செலுத்தியிருந்தார் என்று அவர் கூறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மன்னாரில் சனிக்கிழமை மாட்டு வண்டி சவாரி!

மன்னார், பெப். 21

மன்னார் மாவட்ட இரட்டை மாட்டு வண்டி சவாரி சங்கத்தின் ஏற்பாட்டில், மாபெரும் இரட்டை மாட்டு வண்டிச் சவாரி சனிக்கிழமை மாலை மன்னார் திருக்கேதீஸ்வரம் இரட்டை மாட்டு வண்டி திடலில் இடம் பெற்றது.

5 பிரிவுகளில் இடம்பெற்ற இந்த சவாரியில் வடக்கு மாகாணத்தின் மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களில் இருந்து 40 சோடி காளைகள் பங்கு பற்றியிருந்தன.

இதன் போது வெற்றி பெற்ற காளைகள் மற்றும் உரிமையாளர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# நிறுத்தல் அளவை கருவிகளுக்கு முல்லைத்தீவில் முத்திரையிடல்!

முல்லைத்தீவு, பெப். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவால் நிறுவை, அளவை, நிறுக்கும் கருவிகளிற்கு முத்திரையிடல் நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சந்தை வியாபாரிகள் உள்ளிட்ட சகல வர்த்தகர்களினதும் குறித்த கருவிகள் பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 22ஆம் மற்றும் 23ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச சபை அலுவலகத்திலும், மேலும் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று பிரதேச சபை உப அலுவலகம் முள்ளியவளையிலும் காலை 9 மணிமுதல் மாலை 2.00மணி வரை குறித்த பணிகள் இடம்பெறவுள்ளன.

எனவே சகல வர்த்தகர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் அறியத்தந்துள்ளார்.

குறித்த இடங்களில் ஏனைய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவர்களும் குறித்த சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு முத்திரையிடப்படாது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் மீது 1995ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க அளவீட்டு அளகுகள், நியமங்கள் சேவைகள் சட்டத்தின் பிரகாரம் சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## தர்மபுரத்துக்குள் புகுந்த யானைகள் 20 தென்னை மரங்களை சாய்த்தன!

கிளிநொச்சி, பெப். 21

கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டு யானைகள் 20இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை அழித்து நாசம் செய்துள்ளது.

இதனால் தங்களது ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த காட்டுயானைகள் 20இற்கும் மேற்பட்ட பயன்தரு தென்னை மரங்களை அழித்து நாசப்படுத்தி உள்ளன.

இந்தப் பிரதேசத்தை யானைகளிடம் இருந்து பாதுகாக்கும் வகையில் வேலிகளை அமைத்து தங்களுடைய பயிர்களைப் பாதுகாத்து தரவேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ள அதேநேரம், தற்போது இந்த யானைகளால் ஏற்பட்ட அழிவுகளுக்கும் இழப்பீடுகளை பெற்று தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர். (ஐ)

# ஒட்டுசுட்டான் அமைப்புகளின் கூட்டுறவுப் பயிற்சிப் பட்டறை!

முல்லைத்தீவு, பெப். 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்கு உட்பட்ட கற்சிலைமடு பகுதியில் உள்ள சிலைஅரசி கூட்டுறவு அமைப்பு, பேராறு கிராமத்தில் உள்ள மக்கள் அமைப்பு ஆகியவற்றுக்கு இடை யிலான கூட்டுறவு தொடர்பான பயிற்சி பட்டறை ஒன்று சிலையடி பகுதியில் நடைபெற்றது.

சிலையடி கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் சி.வேதவனம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு சபையின் தலைவரும் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபருமான க. நாகேந்திரராசா, நெதர்லாந்து நாட்டின் மனிதநேய செயல்பாட்டு ஒருங் கிணைப்பாளர் சிவாஜினி மகேந்திரராசா, வி. பி. பௌண் டேசன் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கரிகாலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிராம மட்டங்களில் மக்களின் அடிப்படை பொருளாதாரத்தினை கூட்டுறவு ஊடாக கட்டி வளர்க்கும் நோக்கில் வி. பி. பௌண்டேசன் அமைப்பின் நிறுவுனர் தேய்வேந்திரம் இந்தி ரதாஸின் வழிநடத்தலில் சர்வதேச கூட்டுறவு அமைப்பிடம் இருந்து நிதியினை வி. பி. பௌண் டேசன் ஊடாக இரண்டு கிராம மக்களுக்கு வழங்கும் நோக்கில் கூட்டுறவு ஊடாக மக்களை கட்டி வளர்க்கும் நோக்கிலும் இந்த பயிற்சி பட்டறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு கிராமத்தினையும் சேர்ந்த 50இற்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள் கலந்துகொண்டு பயிற்சியை பெற்றனர். (ஐ)

# மனித உரிமைகள் மீறல்கள் மன்னாரில் கலந்துரையாடல்!

மன்னார், பெப். 21

தமிழர் மனித உரிமை கண்காணிப்பகத்தின் இரண்டாவது மக்கள் அமர்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் கீரி ஞானோதயா மண்டபத்தில் சட்டத்தரணி ரி.வினோதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல் செயல்பாடுகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

குறிப்பாக, மன்னார் பள்ளிமுனை பகுதியில் கடற்படையால் அபகரிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் காணி தொடர்பான பிரச்சனை மற்றும் கனிய மணல் அகழ்வு காரணமாக ஏற்படவுள்ள சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் கழிவு மீன்களை மக்கள் வசிக்கும் பகுதிகளில் வீசுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அதேநேரம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விடயம் மற்றும் போர் குற்ற உள்ளக பொறிமுறை விசாரணை தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கு அரசாங்கம் வழங்குவதாக தெரிவித்த மரண சான்றிதழ் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.




மேலும், மக்களால் எழுப்பப்பட்ட பல்வேறு மனித உரிமை சார்ந்த கேள்விகளுக்கு சட்ட ஆலோசனைகள், பதில்களும் வழங்கப்பட்டது.

குறித்த செயலமர்வில் சட்டத்தரணி சுகாஷ், சட்டத்தரணி டினேசன், சட்டத்தரணி அன்ரனி றொமேல்சன், சட்டத்தரணி ரூபன்ராஜ் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மனித உரிமை மீறல் செயல்பாடுகளால் பாதிக்கப்பட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 4 குற்ற சந்தேகநபர்கள் ஆயுதங்களுடன் கைது!

கொழும்பு, பெப். 21

பல திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நான்கு சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகள் மற்றும் ஒரு எயர்ரைபிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான சந்தேக நபர்கள் மத்தேகொட பகுதியைச் சேர்ந்த 21 வயதுக்கும் 43 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

கொத்தடுவ, மஹரகம, கஹதுடுவ மற்றும் கடுவெல பொலிஸ் பிரிவுகளில் சந்தேக நபர்களினால் குற்றச்செயல்கள் புரியப்பட்டன என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

கடத்தல் முயற்சிகள், கப்பம் கோருதல் மற்றும் தங்கச் சங்கிலிகள் அபகரிப்பு ஆகிய குற்றச்சாட்டுகள் சந்தேக நபர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் சிலாபம் கொஸ்வத்தையில் மதகுரு ஒருவரை கத்தியால் குத்திய சம்பவத்திற்கும் இந்தக் குழுவே காரணம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் மூவரையும் மார்ச் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கடுவெல நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளதுடன், மற்றைய சந்தக நபர் 10 இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

# புற்றுநோய் மருந்துகளுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு!

கொழும்பு, பெப். 21

**மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த சில மாதங்களாக வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக வரும் நோயாளர்களுக்குத் தேவையான சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக நோயாளர்கள் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், நோயாளிகள் கூறுவதைப்போல் மஹரகம அபேக்ஷா வைத்திய சாலையில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றதா என வைத்தியசாலையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் விஜித் குணசேகரவிடம் வினவியபோது, நோயாளர்கள் கூறும் மருந்து வகைகள் வைத்திய சாலையில் உள்ளன என்றார்.

எனினும், தனிப்பட்ட நோயாளியின் பெயரில் கொண்டுவரப்படும் சில மருந்து வகைகள் கிடைப்பதில் சற்று தாமதம் நிலவுகிறது என்று வைத்திய சாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனிடையே, பதுளை பொது வைத்தியசாலையிலும் புற்றுநோயாளர்களுக்கு வழங்கப்படும் சில மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றன என்று நோயாளர்கள் தெரிவித்தனர். அதேபோல சில பகுதிகளில் புற்றுநோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலைகளிலும்தற்போது மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றன என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# தொற்றுக்குள்ளாகும் சிறுவர் எண்ணிக்கை அதிகரிக்கிறது

கொழும்பு, பெப். 21

கொரோனா தொற்றால் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேரும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று கொழும்பு, லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் ஜ. விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நாளொன்றுக்கு சுமார் 20 சிறுவர்கள் வைரஸால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான சிறுவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக நான்கு விடுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவமனையில் தற்போது 80 சிறுவர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். எவ்வாறாயினும், கோவிட்-19, வைரஸ் காய்ச்சல் மற்றும் டெங்கு உட்பட இதேபோன்ற நோய்கள் பரவுவதால் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். (ஐ)

# பணம், ஆவணங்களை உரியவரிடம் சேர்த்த பணியாளர்கள்!

சம்மாந்துறை, பெப். 21

சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின்போது 40 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், வங்கி அட்டை போன்ற ஆவணங்களுடன் கண்டெடுக்கப்பட்ட பணப் பை உரியவரிடம் சேர்க்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

சம்மாந்துறை பிரதேச சபை ஊழியர்களான எஸ்.கமலதாசன் (சாரதி), வீ.கண்ணன், கே.ரஞ்சித்குமார் ஆகியோர் ரீ. சீ. லேன், ஈஸா வீதிகளில் திண்மக் கழிவகற்றல் சேவையை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது பணப்பை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அதை அவர்கள் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்பான தொழிநுட்ப உத்தியோகத்தர் எம். எம். எம். முஸ்தபாவிடம் கையளித்தனர்.

இந்த நிலையில், தொலைத்த பையை தேடிவந்த உரிமையாளரிடம் உறுதிப்படுத்தலின் பின்னர் அந்தப் பணப்பை ஒப்படைக்கப்பட்டது.

இந்த செயலுக்காக கழிவகற்றும் சேவையாளர்கள் பாராட்டப்பட்டதுடன் அவர்களுக்கு நற்சான்றிதழும் வழங்கப்பட்டன. (ஐ)




# நெசவு நிலையங்களுக்கு அமைச்சர் தயாசிறி விஜயம்!

வவுனியா, பெப். 21

வடக்கு மாகாண தொழில் துறை திணைக்களத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள நெசவு பயிற்சி நிலையங்கள் மற்றும் கைத்தறி நெசவு உற்பத்தி விற்பனை நிலையங்களிற்கு கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்று முன்தினம் சென்றிருந்தார்.

இதன்போது வேப்பங்குளம், அம்பலங்கொடல்லை ஆகிய பிரதேசங்களில் உள்ள நெசவு பயிற்சி நிலையம் மற்றும் வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள கைத்தறி நெசவு உற்பத்தி விற்பனை நிலையங்களுக்கு சென்று அவற்றின் செயல்பாடுகள் தொடர்பாக பார்வையிட்டிருந்தார். அத்தோடு அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடியிருந்தார்.

மேலும் நெசவு உற்பத்தியில் சிறப்பாக செயற்பட்டு வரும் 5 பேருக்கு அமைச்சின் ஊடாக மூலப்பொருட்கள் வழங்கி வைத்ததுடன், இரு பயிற்சி நிலையங்களிற்கும் கைத்தறிகளும் வழங்கி வைத்திருந்தார்.

இதன் போது மரக்கன்று ஒன்றும் அமைச்சரால் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட தொழிற்துறை உத்தியோகத்தர் சு. ஜெயபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கைத்தறி நெசவு மற்றும் உள்நாட்டு ஆடைகள் உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, வவுனியா மாவட்ட சுதந்திரக்கட்சியின் இணைப்பாளர் வாசல, தொழிற்துறை திணைக்கள உயர் அதிகாரிகள், என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# ஜனாதிபதி செயலகத்தின் கட்டமைப்பிலும் மாற்றம்!

கொழும்பு, பெப். 21

ஜனாதிபதியின் செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி செயலகத்தின் பணிகளை வினைத்திறனாக்கும் நோக்கில் கட்டமைப்பிலும் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி நிதியம், மக்கள் தொடர்பு பிரிவு உள்ளிட்ட மக்களுக்கு நேரடியாக சேவையாற்றும் பிரிவுகளின் பதவிகளுக்கு புதிய அதிகாரிகளை நியமிப்பதும் இதில் அடங்கும்.

ஜனாதிபதியின் புதிய செயலாளரின் நியமனத்துடன், சில சமூக ஊடகங்கள் தனிப்பட்ட பெயர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் நிர்வாக மாற்றங்களை தவறாகப் புரிந்துகொள்ள முயற்சித்துள்ளதுடன், இவை தவறானவை என ஜனாதிபதி ஊடகப் பிரிவு வலியுறுத்தியுள்ளது.

# எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு எதிர்காலத்தில் ஏற்படும் நிலை!

## பொறுப்பான அமைச்சரே கூறுகிறார்

கொழும்பு, பெப். 21

எதிர்வரும் நாட்களில் எரிபொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய நிலை காணப்படுகிறது என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எரிபொருள் தாங்கி கப்பல்கள் இரண்டு நாட்டை வந்தடைந்துள்ளன. இதனால், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய முடியும். எனினும், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தொடர்ந்தும் உறுதியளிக்க முடியாத நிலை உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இன்று பொருளாதார சிக்கலை எதிர்நோக்க நேரிட்டுள்ளது. இதற்கான தீர்வு தொடர்பில் ஆராயப்பட வேண்டும் என்று கடந்த 6ஆம் திகதி அறிவித்தேன். இதுவரையில் அது தொடர்பான கலந்துரையாடல் அரசாங்கத்துக்குள்ளும் நாட்டிலும் இடம்பெறவில்லை என்றும் அவர் சொன்னார். (ஐ)

# அரச வாகனங்களுக்கு எரிபொருள் புதிய சுற்றுநிரூபம் வெளியானது!

கொழும்பு, பெப். 21

அரச வாகனங்களுக்காக எரிபொருள் பயன்படுத்தப்படும் போது பின்பற்றவேண்டிய வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அரச சேவைகள், மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சுகளுக்கான செயலாளர் ஜே. ஜே. ரத்னசிறியின் கையொப்பத்துடன் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் அத்தியாவசியமற்ற பயணத்தை மேற்கொள்ளும் போது, அரச வாகனங்களுக்கு எரிபொருளை பயன்படுத்த வேண்டாம் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இதேபோல கொழும்பில் நடைபெறும் மாநாடுகள் மற்றும் கருத்தரங்களுக்கு வெளிமாவட்டங்களில் இருந்து அரச அதிகாரிகளை அழைப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ)



# மனித உரிமைகள் பேரவையின் 13 ஆண்டுகால முன்னெடுப்புகள்

## கற்றதும் பெற்றதும் என்ன?



**கடந்த வருட மார்ச் மாத 46:1 இலக்கத் தீர்மானத்தை ஒரு வருடத்துள் இலங்கை அரசு எவ்வாறு அணுகியது, எந்தளவுக்கு முன்னெடுத்தது, எவற்றை நடைமுறைப்படுத்தியது, அதனுடைய நம்பகத்தன்மை என்ன, செய்யத் தவறியவை என்ன, தொடரும் மனித உரிமை மீறல்கள் - அராஜக பயங்கரவாத தடைச்சட்ட செயற்பாடுகள் போன்றவைகளை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதே 49ஆவது அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளரின் கடமை.**

**பனங்காட்டான்**

வழக்கம்போல வருடத்துக்கு மூன்று தடவை வந்துபோகும் ஜெனிவாக் காலம் இது. முள்ளிவாய்க்காலில் அனைத்தும் உறைநிலைக்குச் சென்ற பின்னர் ஜெனிவாவே எம்மவர்க்கு ஆடுகளமாகியுள்ளது.

போர்க்கால மனித உரிமை மீறல்கள், பொறுப்புக்கூறல், சர்வதேச நீதி விசாரணைப் பொறிமுறை என்பவையே ஜெனிவா அரங்கு இலங்கைக்கு தொடர்ந்து வலியுறுத்தி வரும் அம்சங்கள்.

கடந்த வருடம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46:1 இலக்கத் தீர்மானத்தையொட்டிய விடயங்கள் 48ம் 49ம் 51ம் அமர்வுகளில் படிப்படியாகக் கையாளப்படும் என்பது அடிப்படைத் தீர்மானத்தின் முக்கிய அறிவிப்பு.

இதன் பிரகாரம் கடந்த வருட இறுதி அமர்வின்போது மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் மிச்சேல் பச்சிலற் அம்மையார் இது தொடர்பான வாய்மூல அறிக்கையை சமர்ப்பித்தார்.

இலங்கையில் அடிப்படை உரிமைகள், சிவில் செயற்பாடுகளுக்கான இடைவெளி, நிலைபேறான அபிவிருத்தி என்பவைகளில் பொறுப்புக் கூறல் வலுவிழந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது என இவர் இந்த அறிக்கையில் சுட்டியிருந்தார்.

அதேசமயம், பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து செயற்பட தயாராக இருப்பதாக இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்க்ஷ தெரிவித்திருந்ததையும் ஆணையாளர் தமது அறிக்கையில் வரவேற்று, அதற்கு அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு தனது அலுவலகம் தயாராக இருப்பதாக கூறியிருந்தார்.

அதேசமயம், இலங்கை எதிர்கொண்டிருக்கும் சமூக, பொருளாதார மற்றும் நிர்வாக ரீதியான சவால்கள் இராணுவ மயமாக்கலின் மோசமான தாக்கத்தை வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது என்பதை முன்னிறுத்தி வெளிக்காட்ட ஆணையாளர் மறக்கவில்லை.

இராணுவ மயமாக்கல் என்ற சொல்லாடலே இவரது குறிப்பில் முக்கியமானது, நடைமுறை அணுகலைக் காட்டுவது, உண்மையானது. அதாவது கோட்டாபய ஆட்சியின் யதார்த்தப் போக்கை புட்டுக் காட்டுவதாக அமைந்தது.

அதன் காரணமாகவே, பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமைகளின் நம்பகமான முன்னேற்றங்கள் குறித்து பேரவையின் உறுப்பு நாடுகள் இலங்கை மீது மிக நெருக்கமாக அவதானம் செலுத்த வேண்டுமென்ற வேண்டுதலையும் ஆணையாளர் தெட்டத் தெளிவாக எடுத்துக்கூறினார். இதன் ஆங்கில வாசகம் பின்வருமாறு அமைந்திருந்தது:

I encourage council members to continue paying close attention to developments in Sri Lanka, and to seek credible progress in advancing reconciliation, accountability and human rights.

இலங்கை அரசு(கள்) தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயங்களிலும் எவ்வாறு ஏமாற்றம் தரும் வகையில் நடந்து கொள்கிறது என்பதை ஆணையாளர் பச்சிலற் அம்மையார் நன்கறிந்து வைத்திருந்தார் என்பதை, இலங்கை மீது நெருக்கமாக அவதானம் செலுத்துமாறு உறுப்பு நாடுகளிடம் அவர் கேட்டுக் கொண்டார் என்பதற்கூடாக அறிந்து கொள்ளலாம்.

கோட்டாபய ராஜபக்க்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே, அதாவது ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக இருக்கும்போதே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை தாம் அடியோடு நிராகரிப்பதாகக் கூறியதை இங்கு நினைவுபடுத்தினால், அவர் ஜனாதிபதி ஆகிய பின்னர் அவரது ஆட்சி நிர்வாகம் பேரவையின் தீர்மானங்களுக்கு எவ்வாறு மதிப்பளிக்கும் என்பதை புரிந்து கொள்வது இலகுவானது. இதுபற்றிக் கருத்து வெளியிட்ட ஆங்கில ஊடகம் ஒன்று அதன் செய்திக்கு பின்வருமாறு தலைப்பிட்டிருந்தது:

Dismissing UNHRC resolution categorically, Sri Lankan Presidential Candidate Gotabaya Rajabakse commits diplomatic blunder before election (ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரான கோதபாய ராஜபக்ச தேர்தலுக்கு முன்னரே மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தை நிராகரிக்கும் வகையில் இராஜதந்திர மட்டத்தில் மடத்தனமான இசகினைப் புரிந்துள்ளார்) என்று தெரிவித்திருந்தது. இன்றுவரை அவர் அதனைத் தொடர்வதையே பார்க்கக் கூடியதாக உள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது விவாதங்கள் இடம்பெறுதல், தீர்மானங்கள் நிறைவேற்றப்படுதல் என்பவை கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக இடம்பெறுபவையல்ல.

முள்ளிவாய்க்கால் அனர்த்தம் இடம்பெற்ற அதே மே மாத இறுதியில் குருசேத்திரமாக அமைந்த அந்த மண்ணுக்கு ஐ.நா.வின் செயலாளர் நாயகமாகவிருந்த பான் கி மூன் நேரடி விஜயம் செய்தார். அங்கு தாம் பெற்றுக் கொண்டவைகளின் அடிப்படையில் சிலவற்றை கிரகித்துக் கொண்டார். அதன் தொடர்ச்சியாக மகிந்த ராஜபக்க்ஷவும் அவரும் இணைந்து விடுத்த கூட்டறிக்கையே இது தொடர்பான சர்வதேச விசாரணைக்கு வித்திட்டது என்பதை இப்போது ஆட்சித் தரப்பிலுள்ள இளையவர்கள் பலரும் தெரிந்திருக்க மாட்டார்கள்.

இதன் முதற்கட்டமாக தருஸ்மன் குழு விசாரணைக்கென நியமிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்போது மனித உரிமைகள் ஆணையாளராகவிருந்த நவநீதம்பிள்ளை போர்க்களத்தைப் பார்வையிடச் சென்றார். 2013ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் அங்கு சென்று பல சான்றுகளையும் தரவுகளையும் பெற்றுக் கொண்ட அவர், அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் கொழும்பில் ஊடகவியலாளர் மகாநாடு ஒன்றினை நடத்தினார்.

இலங்கை சர்வாதிகாரப் பாதையில் பயணிக்கும் வெளிப்பாடே காணப்படுவதாக பகிரங்கமாக இவர் தெரிவித்த கருத்தினால் ஆட்சி பீடம் கொதித்தெழுந்தது. தென்னாபிரிக்கத் தமிழரான இவரை ஒரு கட்டத்தில் பெண் புலி என்று பட்டம் சூட்டவும் சிங்கள பௌத்தம் பின்னிற்கவில்லை.

இலங்கை சர்வாதிகாரப் பாதையில் செல்வதென்பதற்குச் சான்றாக ஆறு அம்சங்களை நவநீதம்பிள்ளை முன்வைத்தார்.

- சர்வதேச குற்றச்சாட்டுகள் குறித்த உள்ளக விசாரணையில் உண்மைத்தன்மை இல்லை.
- பள்ளிவாசல், தேவாலயங்கள் தாக்கப்பட்டுள்ளமை குறித்து உரிய விசாரணை அவசியம்.
- அரசியல் கைதிகள் தொடர்பில் அரசின் செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமையவில்லை.
- சர்வதேச குற்றச்சாட்டுகள் தொடர்பிலான ஆக்கபூர்வமான விசாரணைகளை அரசு வெளிப்படையாகவும் நம்பகத்தன்மையுடனும் மேற்கொள்ளவில்லை.
- இராணுவத்துக்கெதிரான குற்றச்சாட்டுகளை இராணுவமே விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பது எந்த வகையிலும் நியாயபூர்வமானதாகவோ ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவோ அமையாது.
- இலங்கைப் படைகளுக்கெதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் காணப்படுகையில் இது விடயத்தில் சாட்சியமளித்த வடக்கு கிழக்கு மக்களை அச்சுறுத்துவது நிலைமையை மேலும் மோசமடையவே செய்யும்.

ஆகவே, மனித உரிமைகள் உள்ளிட்ட இலங்கைக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேசிய ரீதியிலான சுயாதீனமானதும், வெளிப்படையானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்படாத பட்சத்தில் சர்வதேச விசாரணைகளைத் தவிர இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற உண்மைகளைக் கண்டறிய வேறு பொறிமுறைகள் கிடையாது என்று நவநீதம்பிள்ளை ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் குறிப்பிட்டதே இப்போது நடைமுறைச் சாத்தியமாகியுள்ளது.

22:1 இலக்கத் தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டபோது இலங்கை அதனை உதாசீனம் செய்தது. மைத்திரி - ரணில் ஆட்சிக்காலத்தில் அமெரிக்கா முன்மொழிந்த தீர்மானத்துக்கு இலங்கை இணைஅனுசரணை வழங்கியதாயினும் கோட்டாபாய அரசு இந்தத் தீர்மானத்திலிருந்து இலங்கையை ஒருதலைப்பட்சமாக விலத்திக் கொண்டது.

தொடர்ச்சியாக 25:1, 30:1, 34:1, 40:1 என்று தொடர்ச்சியாக வந்த தீர்மானங்கள் எதுவும் பலனளிக்காத நிலையில் கடந்த வருட மார்ச் மாத அமர்வில் நிறைவேற்றப்பட்ட 46:1 தீர்மானம் முன்னையவைகளைவிட கனதியானது, இறுக்கமானது, போர்க்கால மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களை பதிவுக்குட்படுத்துவது.

எதிர்காலத்தில் என்றோ ஒருநாள் சர்வதேச குற்ற நீதிவிசாரணைக்கு இலங்கையை உட்படுத்த இடப்படும் அத்திவாரமாக இலங்கை அரசு இதனைப் பார்க்கிறது. அதனால் சிங்கள பௌத்த மக்களை அரணாக தொடர்ந்து வைத்திருக்கவும், பாதிக்கப்பட்ட மக்களை தொடர்ந்து ஏமாற்றவும் விதண்டாவாத உரைகளையும் அறிக்கைகளையும் கோதா தரப்பு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இந்த மாதம் 28ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜெனிவா அமர்வை எதிர்கொள்ள தாங்கள் தயாராகவிருப்பதாகவும், ஜெனிவாவுக்கு அடிபணிய தாங்கள் தயாரில்லையென்றும், ஆணையாளரின் அறிக்கை இலங்கைக்கு சவால் அல்லவென்றும், புதிதாக எந்தத் தீர்மானமும் இந்த அமர்வில் வராது என்றும் முழு உண்மையை மறைத்து தப்பான தகவலை மக்களிடம் ஆட்சித் தரப்பு விதைக்க எத்தனிக்கிறது.

46:1 இலக்கத் தீர்மானத்தை கடந்த ஒரு வருடத்தில் இலங்கை அரசு எவ்வாறு அணுகியது, எந்தளவுக்கு முன்னெடுத்தது, எவற்றை நடைமுறைப்படுத்தியது, அதனுடைய நம்பகத்தன்மை என்ன, செய்யத் தவறியவை என்ன, தொடரும் மனித உரிமை மீறல்கள் - அராஜக பயங்கரவாத தடைச்சட்ட செயற்பாடுகள் போன்றவைகளை எழுத்து மூலம் சமர்ப்பிப்பதே 49ஆவது அமர்வில் மனித உரிமைகள் ஆணையாளரின் கடமை. புதிய தீர்மானம் எதுவும் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்தது. பொய்யும் புரட்டும் கூறி நீண்ட காலத்துக்கு மக்களை ஏமாற்றக்கூடாது. ஏமாற்றவும் முடியாது.

# உக்ரைன் மீதான ரஷ்யாவின் முற்றுகையும் அமெரிக்கா வகுத்துள்ள உபாயங்களும்!

கடந்த இரண்டு மாதங்களாக ரஷ்யா - உக்ரைன் எல்லையில் நடக்கும் பிரச்னை உலக நாடுகளின் கவனத்தைத் திருப்பி இருக்கின்றது. உக்ரைன் எல்லையில் 100,000 மேற்பட்ட ரஷ்யாவின் இராணுவ வீரர்களும், தாக்குதல் வாகனங்களும் குவிக்கப்பட்டிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும். எந்த நேரமும் ரஷ்யா உக்ரைன் மீது படை எடுக்கலாம் என்றதொரு மாயை இதன் மூலம் உருவாக்கப் பட்டிருக்கின்றது.

ஊரிலே நடக்கும் வேலிச் சண்டை போல இதுவும் ஒரு எல்லைச் சண்டைதான். இதற்கு முக்கிய காரணம் நேட்டோ கூட்டணியில் உக்ரைன் அங்கத்தவராகச் சேர்வதை ரஷ்யா தனது பாதுகாப்பு காரணங்களுக்காக விரும்பவில்லை. அதை அனுமதித்தால் தங்கள் எல்லையில் நேட்டோ நாடுகள் ஏவுகணைகளை நிலை நிறுத்தி விடுவார்கள் என்ற பயம் ரஷ்யாவுக்கு இருக்கின்றது. எனவேதான் உக்ரைன் மட்டுமல்ல, எல்லை நாடுகள் நேட்டோவில் இணைவதையும் ரஷ்யா விரும்பவில்லை.

இதைவிட 2015 ஆம் ஆண்டு நடந்த மின்ஸ்க் உடன்படிக்கையின் தொடராகவே இந்த ரஷ்யா - உக்ரைன் எல்லைப் பிரச்னை மீண்டும் உருவெடுத்திருக்கின்றது என்றும் சொல்லலாம்.

**அமெரிக்கா நேரடியாக ரஷ்யாவுடன் மோதப்போவதில்லை, ஆனால் அமெரிக்க பிரஜைகள் பாதிக்கப்பட்டால் கதையே வேறு என்பது போல எச்சரிக்கை விட்டிருக்கின்றது. ரஷ்யா உக்ரைன் மீது படைஎடுத்தால், ரஷ்யாவின் ஜெர்மனியுடனான மிகப்பெரிய திட்டமான ‘நோட் ஸ்ரிம்’ எரிபொருள் காவிக்குழாய்களைத் தடைசெய்யப் போவதாக அமெரிக்கா அறிவித்திருக்கின்றது.**



**குரு அரவிந்தன்**

இதன் காரணமாக ரஷ்யா ஏன் படைகளை எல்லையில் குவித்திருக்கிறது என்பதற்கான காரணத்திற்கு ரஷ்யா விளக்கம் கொடுத்திருக்கின்றது. ‘உக்ரைன் மற்றும் முன்னாள் சோவியத் யூனியன் நாடுளில் நேட்டோ ஆதிக்கம் செலுத்துவதை நிறுத்த வேண்டும். ரஷ்ய நாட்டு எல்லைக்கு அருகே ஆயுதங்கள் கொண்டு வருவதை நிறுத்த வேண்டும். கிழக்கு ஐரோப்பாவில் இருந்து கூட்டுப் படைகளை விலக்க வேண்டும்’ என்பன போன்ற கோரிக்கைகள் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றன.

ஆசிய நாடுகள் பொருளாதாரத்தில் பின் தங்கியதாக இருந்தாலும், தொழில் நுட்பத்தைக் கடைப்பிடிப்பதில் சில ஆசிய நாடுகள் நன்றாக முன்னேறி இருக்கின்றன. ஜப்பான் நாடு மேலை நாடுகளுக்கு எந்த விதத்திலும் குறைந்தது அல்ல என்பதை இரண்டாம் உலக யுத்தத்தில் காட்டியிருந்தது. அதே போல இப்போது சீனாவும், வடகொரியாவும் தொழில் நுட்பத்தில் முன்னேறிய நாடுகளாகத் தங்களைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்ட இந்த இரண்டு நாடுகளுடன் ரஷ்யாவும் இணைந்து கொண்டிருக்கின்றது. இடதுசாரிக் கொள்கை கொண்ட வல்லரசுகளான சீனாவும், ரஷ்யாவும் ஒன்றாகப் பயணிக்கத் தொடங்கினால், என்ன நடக்கும் என்பதுதான் இப்போது எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வியாக இருக்கின்றது.

சமீபத்தில் சீனாவின் தலைநகரான பீஜிங்கில் நடந்த குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியின் போது ரஷ்ய ஜனாதிபதி ஆரம்ப நிகழ்வில் கலந்து சிறப்பித்தது எல்லோர் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அதேபோல அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற சில நாடுகள் ஒலிம்பிக் முதல்நாள் நிகழ்வைப் பகிஷ்கரித்து இருந்ததும் கவனிக்கப்பட்டது. இது ஒரு விளையாட்டுப் போட்டி போல இருந்தாலும், அதன் பின்னணி யில் அரசியல் கலந்திருந்தது தெளிவாகத் தெரிந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஜெர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகள் ஒன்றாக, இணைந்து செயற்பட்டது போல, இப்போது ரஷ்யா, சீனா, ஈரான் ஆகிய நாடுகள் ஒன்றாகப் இராணுவப் பயிற்சி நடத்தி இருக்கின்றன. வெளிப்படையாகவே மேலை நாடுகளுக்குத் தாங்கள் கூட்டு நாடுகள் என்பதை உணர்த்தியிருக்கின்றன. இந்தப் பிரச்னைகளில் தலையிடாமல் இன்னுமொரு குழுவாகச் சில நாடுகள் ஒதுங்கியே இருக்கின்றன.

கடந்த சில மாதங்களாக உலக நாடுகளின் கவனத்தைத் திருப்பி இருக்கும் உக்ரைன் நாடு ஐரோப்பாவின் கிழக்குப் பகுதியில் உள்ளது. இதன் வடகிழக்காக ரஷ்யா இருக்கின்றது. மற்றும், பெலரஸ், போலாந்து, ஸ்லோவாக்கியா, கங்கேரி, ருமேனியா, மல்தோவா, கருங்கடல், அசோவ் கடல் போன்றவற்றை உக்ரைனின் எல்லைகளாக இருக்கின்றன. 233,062 சதுரமைல் பரப்பளவைக் கொண்ட உக்ரைன் ரஷ்யாவுக்கு அடுத்ததாக ஐரோப்பாவில் இரண்டாவது பெரிய நிலப்பரப்பைக் கொண்டது. இரண்டாம் உலகயுத்தத்தின் போது ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட போது நடந்த யுத்தத்தில் 1.4 மில்லியன் உக்ரைன் மக்கள் கொல்லப்பட்டனர். கீயிவ் இதன் தலைநகராக இருக்கின்றது. 41.3 கோடி மக்கள் உக்ரைனில் வசிக்கிறார்கள். 100 பெண்களுக்கு 86 ஆண்கள் என்ற எண்ணிக்கையில் இருக்கிறார்கள். 1991 ஆம் ஆண்டு சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சுதந்திர நாடாகியது. அரசியலுக்காக 24 மாகாணங்களை 490 மாவட்டங்களாகப் பிரித்து உள்ளூராட்சி அமைப்பு அங்கு நடைபெறுகின்றது. கிரிமியா தன்னாட்சிக் குடியரசாக இருக்கிறது. சேவஸ்தபோல், கியிவ் ஆகியன மாநகராட்சியாக இருக்கின்றன.

2004 ஆம் ஆண்டு இங்கே ஒரேஞ்ச் புரட்சி நடைபெற்றது. அரச மொழியாக உக்ரைனியன் மொழி இருக்கின்றது. 87.3 வீதமானவர்கள் கிறிஸ்தவர்கள். இங்கே 17.3 வீதமான மக்கள் ரஷ்ய மொழி பேசுபவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் ரஷ்யா தனது கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய ஒருவரை உக்ரைனின் தலைவராக நியமிக்க முயல்கின்றது. இப்போது ஜனாதிபதியாக வோலோடிமிர் ஜெலன்ஸ்கி இருக்கின்றார். 2014 ஆம் ஆண்டு உக்ரைனின் ஒரு பகுதியான கிரிமியா குடாவை ரஷ்யா கைப்பற்றிக் கொண்டது. அதனால் ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் பிரச்சனை உருவானது. இதைவிட ரஷ்ய எல்லையில் உள்ள உக்ரைன் மாகாணங்களான லுஹான்ஸ்க், டொனிற்ஸ்க் பகுதிகளில் உள்ள சிலர் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களாகவும் இருக்கிறார்கள். இது உக்ரேனுக்குத் தலையிடியாகவும் இருக்கிறது. ரஷ்யாவில் இருந்து உக்ரைன் பிரிந்த போது, உக்ரைன் ஆயுதக் கிடங்கில் இருந்த சுமார் 3000 மேற்பட்ட அணு ஆயுதங்களுக்கு என்ன நடந்தது, பாதுகாப்பாக இருக்கிறதா இல்லையா என்பது இதுவரை உலகிற்குத் தெரியவில்லை.

இது இப்படி இருக்கச் சில நாடுகள் குழுக்களாகப் பிரிந்து இராணுவக் கூட்டுப் பயிற்சிகள் எடுக்கத் தொடங்கித் தங்கள் பலத்தைக் காட்டத் தொடங்கி இருக்கின்றன. உக்ரைன் மீது படையெடுக்க மாட்டோம் என்று ரஷ்யா அடிக்கடி கூறிக் கொண்டாலும், நடவடிக்கைகளைப் பார்க்கும்போது. ஏதோ ஒன்று விரைவில் நடக்கப் போகிறது என்பதை உறுதி செய்ய முடிகின்றது. உக்ரைனைச் சுற்றி ரஷ்யா படைகள் நிலை கொண்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கடல் பகுதிகளில் கப்பல்களும், நீர்மூழ்கிக் கப்பல்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருக்கின்றன. செயற்கைக் கோள்கள் மூலம் வானத்தில் இருந்து எடுக்கப்பட்ட படங்களிலும் எல்லையில் டாங்கிகள் புடைசூழ இராணுவம் குவிக்கப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதே சமயம் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமும், இரண்டு முக்கியமான வங்கிகளின் சேவைகளும் இனந்தெரியாதோரால் முடக்கப் பட்டிருக்கின்றன. தற்காலத்தில் போர் முனை நவீன தொழில்நுட்பத்தில் தங்கி இருப்பதால், கட்டளை பிறப்பிக்கும் பாதுகாப்பு அமைச்சின் இணையத்தளமே முடக்கப்பட்டால், போரின் திசை திரும்பிவிடும். உக்ரைனின் கிரிமியாவை ஏற்கனவே தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ரஷ்யா, தாக்குதல் நடத்துமானால் முதலில் மேற்கே உள்ள ஹேரஸன், ஒடிஸா போன்ற நகரங்களையும், கிழக்கே மெலிட்ரோபோல், மரியுபோல் போன்ற நகரங்களையும் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சி செய்யலாம். கிழக்கு எல்லையில் உள்ள ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் இதற்கு உதவலாம். இதற்கிடையே டொன்பாஸ் நகரில் குண்டுத்தாக்குதல் நடைபெற்றி ருக்கின்றது. இது முறுகல் நிலையில் இருப்பவர்களை உள்ளே இழுத்துவிடும் ஒருவித அரசியல் தந்திரமாகத் தெரிகின் றது. லுகான்ஸா கிளர்ச்சியாளர்கள் தமது பகுதியில் உள்ள ஆதரவாளர்களையும் பாதுகாப்பாக ரஷ்யாவுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளனர்.

அமெரிக்கா நேரடியாக ரஷ்யாவுடன் மோதப்போவதில்லை, ஆனால் அமெரிக்க பிரஜைகள் பாதிக்கப்பட்டால் கதையே வேறு என்பது போல எச்சரிக்கை விட்டிருக்கின்றது. ரஷ்யா உக்ரைன் மீது படைஎடுத்தால், ரஷ்யாவின் ஜெர்மனியுடனான மிகப்பெரிய திட்டமான ‘நோட் ஸ்ரிம்’ எரிபொருள் காவிக்குழாய்களைத் தடைசெய்யப் போவதாக அமெரிக்கா அறிவித்திருக்கின்றது. இதன் மூலம் ரஷ்யா பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ரஷ்யா தனது பக்க நியாயத்தை வெளிப்படுத்தி இருக்கின்றது.

இரண்டு அமெரிக்கத் தூதுவர்கள் மஸ்கோவில் இருந்து ஏற்கனவே வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். உக்ரைனில் தங்கியிருக்கும் தங்கள் குடிமக்களை உடனடியாக வெளியேறும்படி அமெரிக்கா உள்ளிட்ட கனடா, இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற சில நாடுகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. யுத்தத்தின் வலியை இன்னும் அனுபவிப்பவர்கள் நாங்கள், எது எப்படி இருந்தாலும், நிலைமை தீவிரமாக இருப்பதால் யுத்தம் என்று ஒன்று ஏற்பட்டால் இம்முறை உயிர் சேதம் கணக்கிட முடியாமல் போய்விடும், இதன் தாக்கம் உலக நாடுகளையும் பாதிக்கும். ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


19) ரமணி தனது பிறந்த நாளுக்காக ஒரே மாதிரியான கேக் பெட்டிகளை வாங்கினாள். ஒரு பெட்டியில் உள்ள கேக்கை 12 சம துண்டுகளாக வெட்டினால் எல்லாக் கேக்குகளிலும் இருந்து 180 துண்டுகள் கிடைக்கும். எனின், கேக் ஒன்றை 8 சம துண்டுகளாக வெட்டினால் கிடைக்கும் கேக் துண்டுகளின் எண்ணிக்கை யாது?
(1) 120 (2) 150 (3) 160

20) என்னிடம் ஒரேயளவான நீளமுள்ள 27 ஈர்க்குத் துண்டுகள் இருந்தன. அதில் இரு சதுரமுகிகள் செய்தேன். அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை.
(1) 3 (2) 5 (3) 4

21) உரு A யிலுள்ள தராசின் இரு தட்டுக்ளிலும் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் நிறைகள் சமமாகும்.



உரு – A உரு – B

உரு B யிலுள்ள தராசின் இரு பக்கங்களிலும் உள்ள பொருட்களின் நிறைகளைச் சமன் செய்வதற்கு நிறை குறைந்த தராசுத் தட்டில் வைக்க வேண்டிய பொருள் எது?
(1)  (2)  (3) 

22) நோய்க்கு – சிகிச்சை எனின் அறிவுக்கு - ……………………..
(1) கல்வி (2) பாடசாலை (3) புத்தகம்

- **இரண்டு மாணவர்கள் விளையாடிய விதம் கீழே தரப்பட்டுள்ளது.**
மாணவன் ஒருவன் எழுத்துக்கள் சொல்ல மற்றொரு மாணவன் தகவலுக்கேற்ப பையொன்றில் நிற மாபிள்களை இடுதல் வேண்டும். மாணவன் எழுத்துக்கள் சொன்ன விதம் கீழே காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து 23 ஆம் 24ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A B C C B A D B C A D B B C C

A. எனச்சொல்லும் போது 1 வெள்ளை நிற மாபிளையும்
B. எனச் சொல்லும் போது 1 நீல நிற மாபிளையும்
C. எனச் சொல்லும் போது 1 கறுப்பு நிற மாபிளையும் பையில் போட வேண்டும்.
D. எனச் சொல்லும் போது பையில் போட்ட மாபிள்களில் 1 வெள்ளை நிற மாபிளையும் 1 நீல நிற மாபிளையும் வெளியே எடுக்க வேண்டும்.


23) இதகேற்ப விளையாட்டின் இறுதியில் பையில் எத்தனை மாபிள்கள் இருக்கும்?
(1) 9 மாபிள்கள் (2) 11 மாபிள்கள் (3) 10 மாபிள்கள்

24) இறுதியில் பையிலிருந்த வெள்ளை நிற மாபிள்களினதும் நீல நிற மாபிள்களினதும் எண்ணிக்கை முறையே,
(1) 1 வெள்ளை 3 நீலம் (2) 2 வெள்ளை 2 நீலம் (3) 2 வெள்ளை 2 நீலம்

25) கமலி 6 பூக்கள் செய்யும் நேரத்தில் அமலி 8 பூக்கள் செய்வாள் பரணி 5 பூக்கள் செய்யும் நேரத்தில் கமலி 3 பூக்கள் செய்வாள் எனின் வேகமாகப் பூக்களை செய்பவர் யார்?
(1) அமலி (2) பரணி (3) கமலி

26) தாராக்களின் எண்ணிக்கையானது $\frac{1}{3}$ பங்கு குயில்களின் எண்ணிக்கைக்கு சமனாகும். குயில்களானது புறாக்களின் எண்ணிக்கை $\frac{2}{5}$ பங்கிற்கு சமனாகும். புறாக்களின் எண்ணிக்கை 30 எனின் தாரக்களின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 3 (3) 5

27) கீழுள்ள உருக்களில் சமபக்கமுள்ள நான்கு முக்கோணத் துண்டுகளை வெட்டி எடுக்கக்கூடிய உருவைத் தெரிவு செய்க.



(1) (2) (3)

28) அவன் உனக்கு உதவி செய்தால் கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும் என்னும் தொடரின் அர்த்தம்.
(1) அவன் எப்போதும் உதவி செய்வான். என்பதை
(2) அவனுக்கு உதவி தேவைப்படுகிறது. என்பதை
(3) அவன் உதவி செய்யமாட்டான். என்பதை

## விடைகள்

19) 1
20) 1
21) 1
22) 1
23) 1
24) 1
25) 2
26) 1
27) 3
28) 3

---

**கல்வி tv CHANNEL-1**

**21.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

**கல்வி tv CHANNEL - 2**

**21.02.2022**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# டெங்கு நுளம்பு பரவும் அபாயம் 27 பேருக்கு சிவப்பு அறிவித்தல்!

பொத்துவில், பெப். 21

**பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை வைத்திருந்த இருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 27 பேருக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி மருத்துவர் ஏ.யூ. அப்துல் சமட் தெரிவித்தார்.**



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸின் ஆலோசனைக்கமைய பொத்துவில் பிரதேசத்தில் சனிக்கிழமை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் விசேட டெங்கு ஒழிப்பு செயலணியினர் இணைந்து வீடு வீடாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பருவ மழை பெய்ததையடுத்து பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் கடந்த இரண்டு மாதங்களில் சுமார் 198 பேர் டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டிருந்தனர். கர்ப்பவதிகள், சிறுவர்களே தொற்றால் அதிகளவில் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட 7 கிராம சேவகர் பிரிவுகளில் 535 வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பில், இருவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அத்துடன், 27 பேருக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டவர்கள் ஒரு வார காலத்திற்குள் தங்கள் சூழலை துப்பரவு செய்ய வேண்டுமெனவும், மீறுபவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

நுளம்பு உருவாகாமல் தடுப்பதற்கு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்தல், அவற்றின் வதிவிடத்தை முற்று முழுதாக அழித்தல், வதிவிடத்தில் இனம்பெருகாது கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானது.

இது தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ஐ)

## திருமலையில் குழு மோதல் 4 இளைஞர்கள் படுகாயம்!

திருகோணமலை, பெப். 21

திருகோணமலை - கொட்பே மீன்பிடி கிராமத்தில் இரண்டு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட கைகலப்பில் 4 பேர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று தெரிய வருகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஒன்றாக இணைந்து மது அருந்திக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட தர்க்கம் மோதலில் முடிவடைந்தது. இதில் நால்வர் படுகாயங்களுக்கு இலக்கான நிலையில திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலையின் சார்பில் பேசவல்ல ஒருவர் கூறினார்.

இவ்வாறு காயமடைந்தவர்கள் சீனன்குடா கொட்பே மீன்பிடி கிராமத்தில் வசித்து வரும் 22 வயது 26 வயது உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் சீனன்குடா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## திருக்கோவில் 60 பயனாளர்களுக்கு காணி ஆவணங்கள் வழங்கப்பட்டன!

திருக்கோவில், பெப். 21

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் காணிஆவணங்கள் இல்லாமல் குடியிருக்கும் மற்றும் பயிர் செய்வோருக்கு காணி ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் த .கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ. டி. வீரசிங்க கலந்துகொண்டார்.



இந்த நிகழ்வில் 40 பேருக்கு அளிப்புக்களும் 20 பேருக்கு உத்தரவுப்பத்திரங்களுமாக 60 பயனாளிகளுக்கு காணி ஆவணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும், திருக்கோவில் பிரதேச செயலகமானது கடந்த 2020ஆம் ஆண்டு 800இற்கும் மேற்பட்ட காணி அளிப்பு பத்திரம் தயாரித்து கிழக்கு மாகாணத்திலே முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர்களை மகிழ்வூட்டும் நிகழ்வு!

கிரான், பெப். 21

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட ரீதியான நிகழ்வு “ஒருநாளில் உன்னை மகிழ்விப்போம்“ எனும் தொனிப்பொருளில் இந்த வருடத்திற்கான மாவட்ட ரீதியான சிறுவர்களை மையப்படுத்திய முதலாவது நிகழ்வு கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வடமுனை மற்றும் ஊத்துச்சேனை ஆகிய கிராமங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தருக்கான மாவட்ட இணைப்பாளர் வீ. குகதாசன் ஒருங்கிணைப்பில் மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன் வழிகாட்டலில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட 14 பிரதேச செயலக சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியதான களவிஜயம் மேற்கொண்டு அங்கு பிள்ளைகளுக்கு எதிராக ஏற்படக்கூடிய சகலவிதமான துன்புறுத்தல்களையும் குறைக்கும் அல்லது தடுக்கும் வகையிலாக சமூக மட்டத்திலே கட்டமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய மட்ட சிறுவர் அபிவிருத்தி குழு மற்றும் சிறுவர் கழகங்களை மீளமைப்புச் செய்வதும், சிறுவர்களுக்கான படைப்பாக்க திறன் மற்றும் வாழ்க்கைத் தேர்ச்சி சம்பந்தமான பயிற்சிகளை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்களுக்கான மகிழ்வூட்டல், பிள்ளைகளை பராமரிப்பது, அவர்களின் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல், வீட்டை அடிப்படையாக கொண்ட பராமரிப்பின் முக்கியத்துவம், திணைக்களத்தினுடைய மாற்றுப் பராமரிப்பு தேசிய கொள்கை திட்டம், சிறுவர் பங்கேற்பு போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் பங்குபற்றிய அனைத்து சிறுவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. இது போன்று மாவட்டத்திலே அனைத்து சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களையும் ஒருங்கிணைத்த வகையில் ஒவ்வொரு பிரதேச செயலகமாக சென்று அங்கு காணப்படும் பின்தங்கிய கிராமங்களிலும் இவ்வாறன நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்ற தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கட்டளையை மீறிய வாகனத்தை மடக்கிப்பிடித்தனர் பொலிஸார்!

கல்முனை, பெப். 21

காரைதீவு பிரதேசத்தில் இருந்து கல்முனை நோக்கி வந்த டிபெண்டர் வாகனம் ஒன்றை போக்குவரத்து பொலிஸார் வழிமறித்த போது அவர்களின் கட்டளையை மீறி தப்பிச் சென்றது.

அந்த வாகனத்தை பொலிஸார் துரத்தியபோது அவர்களின் வாகனத்தைத் தாக்கிவிட்டு டிபெண்டர் வாகனம் தப்பிச் சென்றது.

தொடர்ந்து அந்த வாகனத்தை பொலிஸார் விரட்டவே கல்முனை கடற்கரை வீதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதியும் அதிலிருந்தவர்களும் தப்பிச் சென்றனர்.

அங்கு சென்ற கல்முனை பொலிஸ்தலைமைப்பீட பொறுப்பதிகாரி எம்.ரம்சீம் பக்கிர் தலைமையிலான குழுவினர், அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் வாகனத்தை கைப்பற்றி அதனை கல்முனை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

தப்பிச் சென்றவர்களில் இருவரை கைது செய்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)



# டொன்பாஸ் மக்களை ரஷ்யாவுக்குள் இடம்பெயருமாறு கட்டாய உத்தரவு!

## உக்ரைனுக்குள்ளே தனி நாடுகளை அங்கீகரிக்கத் தயாராகிறது ரஷ்யா!

மொஸ்கோ, பெப். 21

கிழக்கு ஐரோப்பியப் போர் நெருக்கடி இப்போதைக்கு முடிவுக்கு வராமல் தொடர்ந்து நீண்ட காலம் இழுபடக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன.

உக்ரைன் எல்லையில் இருந்து தனது படைகளைத் திருப்பி அழைப்பதாக ரஷ்யா அறிவித்த பின்னர், உக்ரைனின் கிழக்கில் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களது கட்டுப்பாட்டில் இருக்கின்ற தன்னாட்சிப் பிராந்தியங்களில் ஷெல் தாக்குதல்கள் தொடங்கியிருக்கின்றன.

உக்ரைன் படைகளே தாக்குதலைத் தொடக்கியிருப்பதாகக் கிளர்ச்சியாளர்களும், கிளர்ச்சிப் படைகளே ரஷ்யாவின் தூண்டுதலில் ஷெல் வீச்சுக்களை நடத்துகின்றனர் என உக்ரைனும் மாறி மாறிக் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

பதற்றத்தைத் தணிப்பதாகக் கூறிவிட்டு போரை ஆரம்பிப்பதற்குச் சாக்குப் போக்கான காரணம் ஒன்றை உருவாக்குவதில் ரஷ்யா ஈடுபட்டு வருகிறது என்று அமெரிக்கா கூறியிருக்கிறது. தனது படைகள் எல்லை மீறிச் செல்வதற்கு வாய்ப்பான ஒரு கள நிலைவரத்தை கிளர்ச்சியாளர் வசம் உள்ள இரண்டு தன்னாட்சிப் பிராந்தியங்களிலும் உருவாக்கி அதன் மூலம் அங்கு தனது படைகளை நகர்த்துவது மொஸ்கோவின் இராணுவ உத்தியாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

டொன்பாஸ் என்பது ரஷ்யாவோடு எல்லையைக் கொண்டுள்ள உக்ரைனின் கிழக்குப் பிராந்தியம்.

2014 இல் கிரீமியா குடாவை ரஷ்யா ஆக்கிரமித்த சமயத்தில் உக்ரைன் படைகளுக்கும் ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே இங்கு சண்டைகள் மூண்டன. அச்சமயம் டொன்பாஸ் பிராந்தியத்தின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரண்டு பகுதிகள் கிளர்ச்சிப் படைகளது வசமாகின. அவற்றை அவர்கள் ரஷ்யாவின் ஆதரவோடு தன்னாட்சிக் குடியரசுகளாக நிர்வகித்து வருகின்றனர்.

உள்நாட்டுக்குள்ளேயே தனது சொந்த டொன்பாஸ் பிராந்திய மக்களை உக்ரைன் படைகள் கொடுமைப்படுத்தி இனப்படுகொலை புரிந்து வருகின்றன.

என்று மொஸ்கோ குற்றம் சுமத்தி வருகிறது. டொன்பாஸ் நெருக்கடியைத் தணிப்பதற்கு சர்வதேச முயற்சியுடன் உருவாக்கப்பட்ட மின்ஸ்க் உடன்படிக்கையை ரஷ்யாவும் உக்ரைனும் மதித்துப் பின்பற்றவில்லை. இப்போது எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பிராந்தியம் ஐரோப்பியப் போர் ஒன்றுக்கான மையமாக மாறியிருக்கிறது.

ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சிப் படைகளால் நிர்வகிக்கப் படுகின்ற டொனெட்ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) இரண்டிலும் போர் பதற்றத்தை அதிகரித்து அந்த மக்களை பாரிய அளவில் ரஷ்யாவுக்கு வெளியேற்றுகின்ற முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலில் பெண்கள் குழந்தைகள், வயோதிபர்களை வெளியேறுமாறு கிளர்ச்சித் தலைவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதனால் அங்கு வசிக்கும் பல லட்சம் மக்கள் பெரும் இடப்பெயர்வு அவலம் ஒன்றுக்கான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். ஆண்கள் அனைவரையும் போருக்கு அணிவகுக்குமாறு கிளர்ச்சியாளர்கள் உத்தரவிட்டிருப்பதால் பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

நாட்டின் கிழக்குப் பகுதியில் உக்ரைனக்கு இவ்வாறு இராணுவ ரீதியில் நெருக்குதல் கொடுத்தபடி மறுபக்கத்தில் அரசியல் ரீதியில் அழுத்தம் தரும் ஒரு நடவடிக்

கையிலும் மொஸ்கோ இறங்கியுள்ளது. டொனெட்ஸ்க் (Donetsk) மற்றும் லுஹான்ஸ்க் (Luhansk) இரண்டையும் தனிநாடுகளாக - சுதந்திரக் குடியரசுகளாக- அங்கீக

ரிக்கின்ற ஒரு தீர்மானத்தை ரஷ்யாவின் நாடாளுமன்றமாகிய டூமா நிறைவேற்றியிருக்கிறது. அந்தத் தீர்மானம் அதிபர் புடினின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது.

உக்ரைனைத் தன்னுடன் மீள இணைக்க முடியாவிட்டாலும் அங்குள்ள இரண்டு தன்னாதிக்கப் பகுதிகளையும் சுதந்திர நாடுகளாக மாற்றித் தனக்குச் சார்பான ஆட்சிகளை அங்கு நிறுவிக் கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் நாகரீகத்தை விஸ்தரிப்பது புடினின் நோக்கமாக உள்ளது.

2014 இல் உக்ரைனில் தன்னாட்சிப் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் இரண்டையும் கீவ் அரசு அங்கீகரிக்கவில்லை. உக்ரைன் இராணுவச் சோதனை சாவடிகளால் சூழப்பட்ட இவ்விரு பிரதேசமக்களும் சதா போர்ப் பதற்றம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் சிக்கி வாழ்வைக் கழிக்கின்றனர். (அ)



உக்ரைன் - ரஷ்யா போர் பதற்றதுக்கு மத்தியில்

# போலந்துக்கு 250 டாங்கிகளை விற்பனை செய்யும் அமெரிக்கா!

நியூயோர்க், பெப். 21

உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே அதிகரித்து வரும் போர் பதற்றங்களுக்கு மத்தியில் கிழக்கு ஐரோப்பாவில் தனது முக்கிய கூட்டாளியான போலந்தின் பாதுகாப்பை வலுப்படுத்தும் வகையில் அந்நாட்டுக்கு 250 அதிநவீன ஆப்ராம்ஸ் டாங்கிகளை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் ஒஸ்ரின் வெள்ளிக்கிழமை அறிவித்தார்.

அண்டை நாடான பெலாரஸில் ஆயிரக்கணக்கான ரஷ்யப் படைகள் குவிக்கப்பட்டுள்ளதால் தமது நாட்டின் பாதுகாப்பு குறித்து போலந்து தலைவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பெலாரஸூடன் இணைந்து மேற்கொள்ளும் கூட்டுப் பயிற்சியின் போர்வையில் உக்ரைனைச் சுற்றி ரஷ்யப் படைகள் முற்றுகையிட்டுள்ளன. ஆனால் உக்ரைன் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் போலந்துக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்த அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்ரின், போலந்து எல்லையில் இருந்து 200 மைல்கள் (321 கி.மீ.) தொலைவில் ரஷ்யப் படைகள் நிலைகொண்டுள்ளதாக கூறினார்.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்தால் இது போலந்திலும் நெருக்கடிகளை உருவாக்கும். போலந்து பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த உக்ரைனியர்களை சமாளிக்க வேண்டி ஏற்படும். அத்துடன் எல்லையிலும் சவால்களைச் சந்திக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் 5,000 கூடுதல் அமெரிக்க துருப்புக்கள் போலந்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன், கூடுதல் போர் விமானங்களையும் அமெரிக்கா அனுப்பி வைத்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே 250 அதிநவீன ஆப்ராம்ஸ் டாங்கிகளை போலந்துக்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்ரின் அறிவித்தார்.

ஆப்ராம்ஸ் யுத்த டாங்கிகள் உலகத் தரம் வாய்ந்த அமெரிக்க தயாரிப்பாகும். இது அதிநவீன பீரங்கிகளையும் கொண்டுள்ளது. எதிரிகளின் கவச வாகனங்கள் மற்றும் குறைந்த உயரத்தில் பறக்கும் விமானங்களையும் இது தாக்க வல்லது என இதன் உற்பத்தியாளரான ஜெனரல் டைனமிக்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த யுத்த டாங்கிகளை வழங்குவது போலந்து ஆயுதப் படைகளுடனான நமது ஒத்துழைப்பை வலுப்படுத்தும். எங்கள் ஒருங்கிணைந்த இராணுவ பலத்தை அதிகரிக்கும். அத்துடன், நேட்டோ நட்பு நாடுகளின் நம்பகத் தன்மையை அதிகரிக்கும் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் லொயிட் தெரிவித்தார்.

போலந்தின் தென்கிழக்கு எல்லையானது மேற்கு உக்ரேனிய நகரமான லிவிவ் நகருக்கு அருகில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# ஒட்டாவாவில் தொடர்கின்றது வாகன சாரதிகள் ஆர்ப்பாட்டம்

## பலர் கைது! வாகனங்கள் பறிமுதல்!!

ஒட்டாவா, பெப். 21

கனேடிய தலைநகர் ஒட்டாவாவில் பொலிஸாரின் கடும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கட்டாய தடுப்பூசி ஆணைக்கு எதிராக கனரக வாகனச் சாரதிகள் போராட்டம் நேற்று முன் தினம் தொடர்ந்து இடம் பெற்றது.

போராட்டங்களில் ஈடுபட்ட மேலும் 47 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கடந்த வெள்ளிக்கிழமை 100க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்து போராட்டக்காரர்களை கைது செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை முதல் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போராட்டங்களில் ஈடுபட்ட 53 வாகனங்கள் இழுத்துச் செல்லப்பட்டு அகற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நான்காவது வாரமாக வார இறுதி நாள் போராட்டம் இடம்பெற்றபோதும் கடும் கட்டுப்பாடுகள் காரணமாக இதில் குறைந்தளவான எதிர்ப்பாளர்களே பங்கேற்றிருந்தனர். ஜனவரி 28 அன்று ஆர்ப்பாட்டம் தொடங்கிய பின்னர் முதன்முறையாக பாராளுமன்ற வளாகத்துக்கு அருகில் உள்ள வெலிங்டன் தெருவில் இருந்து பொலிஸார் போராட்டக்காரர்களை அகற்றினர். (அ)

# தீப்பற்றி எரிந்த கப்பலில் 12 பேரை காணவில்லை!

## கிரேக்கத்தில் தேடும் பணி தீவிரம்

எதென்ஸ், பெப். 21

கிரேக்கத்தின் கோர்பு தீவுக்கு அருகே பயணிகள் கப்பல் ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் காணாமல் போன 12 பேரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

அவர்கள் அனைவரும் பல்கேரியா, கிரீஸ், துருக்கி மற்றும் லிதுவேனியா நாடுகளைச் சேர்ந்த கனரக வாகன சாரதிகள் என்று கருதப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை தீப்பற்றி எரியத் தொடங்கிய கப்பலில் தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்பு வீரர்கள் இரண்டாவது நாளாகவும் ஈடுபட்டிருந்தனர்.

கப்பலில் சிக்கியிருந்த 280 பேர் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். இத்தாலிய நிறுவனத்துக்குச் சொந்தமான இந்தக் கப்பல் கிரீஸில் உள்ள இகோமெனிட்சாவிலிருந்து இத்தாலிய துறைமுகமான பிரிண்டிசிக்கு சென்றபோது தீ விபத்து ஏற்பட்டது.

கப்பலில் 239 பயணிகள் மற்றும் 51 பணியாளர்கள் இருந்ததாக கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஆனால் கப்பலில் பயணிகளாக பதிவு செய்யப்படாத இரண்டு ஆப்கானிஸ்தான் பிரஜைகளும் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டதாக கிரேக்க கடலோர காவல் படை தெரிவித்துள்ளது. தீ அணைக்கப்பட்டவுடன் கப்பல் பாதுகாப்பான இடத்திற்கு இழுத்துச் செல்லப்படும். அத்துடன், தீவிபத்தால் ஏற்பட்டுள்ள கடல் மாசுபாட்டை தவிர்க்கும் முயற்சியாக கடல் நீரில் கலந்துள்ள எரிபொருள் அகற்றப்படும் என கிரேக்க கப்பல் போக்குவரத்து துறை அமைச்சர் கியானிஸ் பிளாக்கியோடாகிஸ் தெரிவித்தார். (அ)



# விமானம் மீது லேசர் தாக்குதல்

## சீனா மீது அவுஸ்திரேலியா குற்றச்சாட்டு

கான்பரா, பெப். 21

சீனக் கடற்படைக் கப்பல் ஒன்று தனது போர் விமானம் ஒன்றின் மீது “மிலிட்டரி கிரேட்” லேசரை பிரயோகித்ததாக அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு குற்றம் சாட்டியுள்ளது. கடந்த வியாழக்கிழமை அன்று இந்தச் சம்பவம் நடந்தபோது, சீனக் கப்பல் வடக்கு அவுஸ்திரேலிய அரபுரா கடலில் சென்று கொண்டிருந்தது என்றும் அறிவித்துள்ளது. இதுபோன்ற செயல்கள் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக அவுஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. மேலும் தொழில்சார் மற்றும் பாதுகாப்பற்ற இராணுவ நடத்தையை தாம் கடுமையாக கண்டிப்பதாகவும் அவுஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் குறித்த நடவடிக்கை தொடர்பாக சீன அதிகாரிகள் இதுவரை எந்த கருத்தையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தேசிய சுப்பர் லீக் கிரிக்கெட் யாழ்ப்பாணம் அணி சம்பியன்!

கண்டி, பெப். 21

இலங்கை கிரிக்கெட் சபை நடத்திய தேசிய சுப்பர் லீக் 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் அணி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது.

கண்டி பல்லேகலை சர்வதேச கிரிக்கெட் விளையாட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்ற கண்டி அணிக்கு எதிரான இறுதிப் போட்டியில் 37 ஓட்டங்களால் வெற்றி பெற்று யாழ்ப்பாணம் அணி சம்பியனானது.

யாழ்ப்பாணம் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்ட 19 வயதுக்குட்ட இலங்கை அணித் தலைவர் துனித் வெல்லாலகே அபாரமாகத் துடுப்பெடுத்தாடி அரைச் சதம் குவித்து யாழ்ப்பாணம் அணியின் வெற்றிக்கு வித்திட்டார்.

யாழ்ப்பாணம் அணியின் வழமையான அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா இறுதிப் போட்டியில் விளையாடததால் அவருக்கு பதிலாக சதீர சமரவிக்ரம அணித் தலைவராக விளையாடினார்.

இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் அணி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்றது.

இளம் வீரர் துனித் வெல்லாலகே 5 பௌண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக 74 ஓட்டங்களைக் குவித்தார். அவர், 35 ஓட்டங்களைப் பெற்ற நிமந்த மதுஷங்கவுடன் 4ஆவது விக்கெட்டுக்காக 80 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் பெற்றார். தவிர, ரவிந்து பெர்னாண்டோ 41 ஓட்டங்களையும் நிஷான் மதுஷ்க 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

கண்டி அணி சார்பில் பந்து வீசிய அசித பெர்னாண்டோ 5 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கண்டி அணி 45.5 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 221 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் அணித் தலைவர் கமிந்து மெண்டிஸ் 46 ஓட்டங்களையும் திக்ஷில டி சில்வா 37 ஓட்டங்களையும் சஹான் ஆராச்சிகே 33 ஓட்டங்களையும் பெற்றனர். (ஐ)






## டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் சானியா மிர்சா இணை தோல்வி!

டுபாய், பெப். 21

டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் இரட்டையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா, செக் குடியரசின் லூசி ஹ்ரடேக்கா இணை தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் சானியா இணை உக்ரைனின் லியுட்மிலா கிச்செனோக் மற்றும் லாட்வியாவின் ஜெலினா ஒஸ்டாபென்கோ ஜோடியை எதிர்த்து களமிறங்கியது.

விறுவிறுப்பாக நடந்த போட்டியில் முதல் செற்றை சானியா இணை கைப்பற்றியது. ஆனால், அடுத்த இரண்டு செற்களை இழந்து தோல்வியை தழுவினர். முடிவில், (6-2, 2-6, 7-10) என்ற செற் கணக்கில் அவர்கள் தோல்வி அடைந்தனர்.

முன்னதாக சானிய மிர்சா, 2013ஆம் ஆண்டு அமெரிக்காவின் பெத்தானி மேடெக்-சாண்ட்ஸுடன் இணைந்து டுபாய் சம்பியன்ஷிப் தொடரில் இரட்டையர் பட்டத்தை வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இந்திய டெஸ்ட் அணியின் தலைவராகவும் ரோஹித்!

புதுடில்லி, பெப். 21

இலங்கைக்கு எதிரான டெஸ்ட் மற்றும் இருபது - 20 தொடர்களில் விளையாட இருக்கும் இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனிடையே, டெஸ்ட் அணி யின் தலைவராகவும் ரோஹித் சர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய டெஸ்ட் அணியிலிருந்து அண்மைக் காலமாக தடுமாறி வரும் சேதேஷ்வர் புஜாரா, அஜிங்க்ய ரஹானே, இஷாந்த் சர்மா, ரித்திமன் சஹா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். இந்தத் தொடரில் விராட் கோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் இடத்தில் புஜாரா, ரஹானே, ஹனுமா விஹாரி, ஷுப்மன் கில் ஆகியோர் பதினொருவர் அணியில் பரிசீலிக்கப்படுகின்றனர். இந்த நிலையில், ஷ்ரேயாஸ் ஐயருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது.

இருபது - 20 தொடரில் சஞ்சு சாம்சனுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர, சுழல்பந்து வீச்சாளரான சௌரவ் குமாருக்கு டெஸ்ட் அணியில் முதன்முறையாக வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய அணிகள் மோதும் தொடர் எதிர்வரும் வியாழக்கிழமை லக்னோவில் ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அணிகளின் விவரம்:

டெஸ்ட்: ரோஹித் சர்மா (தலைவர்), மயங்க் அகர்வால், பிரியங்க் பஞ்சல், விராட் கோலி, ஷ்ரேயாஸ் ஐயர், ஹனுமா விஹாரி, ஷுப்மன் கில், ரிஷப் பந்த், கே.எஸ்.பரத், ஆர். அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, ஜெயந்த் தாக்குர், குல்தீப் யாதவ், ஜஸ்பிரீத் பும்ரா, முகமது ஷமி, முகமது சிராஜ், உமேஷ் யாதவ், சௌரவ் குமார்.

இருபது - 20 - ரோஹித் சர்மா (தலைவர்), ருதுராஜ் கெய்க்வாட், இஷான் கிஷண், சூர்யகுமார் யாதவ், ஷ்ரேயாஸ் ஐயர், வெங்கடேஷ் ஐயர், தீபக் ஹூடா, ஜஸ்பிரீத் பும்ரா, புவனேஷ்வர் குமார், ஹர்ஷல் படேல், முகமது சிராஜ், சஞ்சு சாம்சன், யுஜவேந்திர சஹல், ரவீந்திர ஜடேஜா, குல்தீப் யாதவ், ரவி பிஷ்னோய், அவேஷ் கான். (ஐ)

## டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் சிமோனா அதிர்ச்சி தோல்வி!

டுபாய், பெப். 21

டுபாய் ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் அரையிறுதிப் போட்டியில் முன்னணி வீராங்கனையான சிமோனா ஹாலேப் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் ருமேனியாவின் சிமோனா ஹாலேப் லத்வியாவின் ஒஸ்ராபென்கோவை எதிர்கொண்டார்.

முதல் செற்றை சிமோனா 6 -2 என்ற செற் கணக்கில் இலகுவாக வெற்றி பெற்றார். ஆனால், இரண்டாவது செற்றில் ஒஸ்ராபென்கோ சிமோனாவுக்கு சவால் கொடுத்தார். ரைபிறேக்கர் வரை நீடித்த போட்டியில் இறுதியில் 7 -6 (7-0) என்ற கணக்கில் ஒஸ்ராபென்கோ வெற்றி பெற்றார்.

மூன்றாவது சுற்றை 6 -0 என்ற செற்கணக்கில் இலகுவாக வெற்றி பெற்ற ஒஸ்ராபென்கோ இறுதியாட்டத்துக்கு முன்னேறினார். (ஐ)






## தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் நியூசிலாந்து அணி அபார வெற்றி!

கிறிஸ்ட்சேர்ச், பெப். 21

தென்னாபிரிக்க அணி நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு அங்கு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்றது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதல் இனிங்ஸில் 95 ஓட்டங்களுடன் சுருண்டது.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் இனிங்ஸில் நியூசிலாந்து 482 ஓட்டங்கள் குவித்து அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஹென்றி நிக்கோல்ஸ் சதமடித்து 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரொம் பிளண்டல் 96 ஓட்டங்களை அடித்து சதத்தை தவறவிட்டார்.

387 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தென்னாபிரிக்கா இரண்டாவது இனிங்ஸைத் தொடங்கியது. நியூசிலாந்து பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் இரண்டாவது இனிங்ஸிலும் அந்த அணி மளமளவென விக்கெட்டை இழந்தது 111 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன்மூலம் நியூசிலாந்து அணி இனிங்ஸ் மற்றும் 276 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று இரண்டு போட்டிகள் கொண்ட தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் வரும் 25ஆம் திகதி ஆரம்பமாகின்றது. (ஐ)

# பயங்கரவாத சட்டத்தின் மூலம் அதிக அநீதிகள் நிகழ்ந்துள்ளன

## சுரேன் ராகவன் எம். பி.

வவுனியா, பெப். 21

**பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் அதிக நேரங்களில் அநீதி நடந்திருக்கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.**

வவுனியாவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சுதந்திரக் கட்சியின் மாவட்ட மாநாட்டின் பின் ஊடகவியலாளரின் கேள்விக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

இலங்கையில் இருந்த கஷ்டமான ஒரு நிலையில் பயங்கரவாத சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் அடிப் படையில் பங்கரவாதத்திற்கு எதிராக அது பயன்படுத்தப்பட் டுள்ளது. எனினும், அதிக நேரங்களில் அநீதி நடந்திருக் கின்றது என்பதை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் சர்வதேசமும் ஏற்றுக் கொண் டிருக்கின்றனர்.



பயங்கரவாதம் முற்றாக அழிக்கப்பட்டு விட்டதாக சமுதாயம் ஏற்றுக்கொள்ளு மாயின் அந்த சட்டத்தை நாங்கள் முற்றாக நீக்க வேண் டும். எனினும், 2019 ஆம் ஆண்டு பயங்கரவாதம் மீண் டும் தலை தூக்கியது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெற் றது. ஆகவே, பயங்கரவாதத் திற்கு எதிராக நாட்டில் சட்டங்கள் இருப்பது பிரச்னை யல்ல. ஆனால், அந்த சட்டங் கள் சாதாரண மக்களை பாதிக் காத வகையில் இருக்க வேண் டும். ஆகையால் அந்த சட் டத்தை சீர்திருத்தி நாட்டின் இறைமையை சரியான வித த்தில் பாதுகாத்துக் கொண்டு, இலங்கையில் மத ரீதியான, இன ரீதியான பயங்கரவாதம் இருக்குமாயின் அதற்கு எதிராக அதனை பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

இதற்கு சமாந்தரமாக இருக்கின்ற சர்வதேச சட்டங் களை பரிசீலித்து இலங்கையின் பாதுகாப்புக்கும், மக்களின் பாது காப்புக்கும் ஏற்ற வகையில் பயங்கரவாத சட்டத்தை அமைக்க வேண்டும் என்பதுதான் எனது கருத்து - என்றார். (ஐ)



# உடபுசலாவாவையில் தீ; ஏழு கடைகள் நாசம்!

கொழும்பு, பெப் 21

கண்டி உடபுசலாவாவை நகரில், பலகைகளால் அமைக் கப்பட்டிருந்த கடைத் தொகுதி யொன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்து காரண மாக, 7 வியாபார நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

ஆடைகள் மற்றும் பிளாஸ் ரிக் பொருட்கள் உள்ளிட்ட வற்றை விற்பனை செய்து வந்த விபாயாபார நிலையங்களே தீக்கிரையாகின.

தீ விபத்து காரணமாக எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படாத போதிலும் கடைகளி லிருந்த பொருட்கள் எரிந்து நாசமாகின.

எனினும், அழிவு விவரங்கள் தொடர்பில் நேற்று வரை மதிப் பிடப்படவில்லை. இது தொடர் பில் பொலிஸார் மேலதிக விசா ரணைகளை நடத்தி வருகின்ற னர். (கே)

# ஐந்து துப்பாக்கிகளுடன் மதவாச்சியில் ஒருவர் கைது!

கொழும்பு, பெப் 21

அநுராதபுரம் - மதவாச்சி - துமிந்தேகம பிரதேசத்தில் பொலிஸா ர் நடத்திய சோதனை நடவடிக்கையின்போது, உள்நாட்டுத் துப்பாக்கிகள் ஐந்துடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட இந்த நடவடிக்கையில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே இவ்வாறு கைதானார்.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (கே)

# சுகாதார விதிகளை மீறிய 962 பேருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, பெப் 21

மேல் மாகாணத்தில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 962 பேர் கடும் எச்சரிக்கையின் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டனர்.

மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறுவோரை கண்காணிக்கும் செயல்பாடு தொடர்ந்து முன்னெடுக் கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நேற்றைய தினம் 643 பொலிஸார் இணைந்து கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது 3,050 மோட்டார் சைக்கிள்களும் 1,817 முச்சக்கர வண்டிகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அத்துடன் 5,498 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய 962 பேருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கே)

# மாடியிலிருந்து விழுந்து வெளிநாட்டு பிரஜை பலி!

கொழும்பு, பெப் 21

பதுளை எல்லை பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த வெளிநாட்டு பிரஜையொருவர், இரண் டாம் மாடியிலிருந்து கீழே விழுந்து நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

செகொலொஸ்வெகியா நாட்டைச் சேர்ந்த 27 வயதுடைய ஜெகோப் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் உடனடியாக தெமோதர வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதிலும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

பிரேதப் பரிசோதனைக்காக தெமோதர வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள் ளது.

இது தொடர்பில், எல்லை பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கே)



# 10 அடி பள்ளத்தில் பாய்ந்தது வான் 5 பேர் கடும் காயங்களுக்கு இலக்கு

கொழும்பு, பெப். 21

மஸ்கெலியா - சாமிமலை பிரதான வீதியில் பாக்ரோ பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 11.45 மணியளவில் வான் ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 10 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இதில் பயணம் செய்த 5 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகி டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர் என்று மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை - கோட்டேகொடை பகுதியிலிருந்து சிவனொளிபாதமலை யாத்திரைகளை மேற்கொண்டு விட்டு மீண்டும் வீட்டுக்கு சென்று கொண்டிருந்த வானே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

வானில் 12 பேர் பயணம் செய்தனர் என்றும் அதில் ஐவர் கடும் காயங்களுக்கு இலக்காகினர் என்றும் அறிய வருகின்றது. வேறு சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

தூக்கக் கலக்கத்தினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாக முதல் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# 50 பேர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் 100 படையினர் கண்காணிப்பில்!

## கத்தோலிக்க கூட்டமைப்பு சாடல்

கொழும்பு, பெப். 21

அரசியல்வாதிகளின் அற்ப அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற படையினரைப் பயன்படுத்த வேண்டாம் என்று கத்தோலிக்க அமைப்புகளின் கூட்டமைப்பு வலியுறுத்தியுள் ளது.

அந்த அமைப்பின் ஏற்பாட் டாளர் திலின அழககோன் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரல்களை நிறைவேற்ற படையினர் பயன்படுத்தப்படு வதால் பொதுமக்களிடம் இருக்கும் மரியாதை குறைந்து வருவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் களுக்கு நீதி கோரி 50 பேர் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டத்தின் போது, 100 புலனாய்வு மற்றும் படைத்தரப்பினர் கலந்து கொண்டனர் என்று குறிப்பிட் டார்.

அத்துடன், நீதி கேட்டு சிவில் ஆர்வலர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு அதிகாரிகள் பயப்படுவது ஏன் என்று அவர் கேள்வி எழுப்பினார்.

படையினரை மதிக்கும் அதே வேளையில், அவர்கள் பொதுப் பாதுகாப்பை உறுதி செய்யவே நிலைநிறுத்தப்பட்டதாக நம்பு வதாகவும் குறிப்பிட்டார். அரசியல்வாதிகளின் தேவைக ளுக்காக அவர்கள் ஈடுபடுத்தப்படு வது கவலைக்குரியது - என்றார். (ஐ)

## இந்திய தேசிய...

முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய மாநாடு நேற்று முல்லைத்தீவில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“எங்களுடைய தேச அங்கீகாரத்தை நாங்கள் பெறாவிட்டால் இந்த இனம் அழியும். தேசத்தை அழிப்பதுதான் எதிரியின் நோக்கம். தேசத்தின் அங்கீகாரம் மட்டும்தான் தமிழ் இனத்தைக் காப்பாற்றும். இன்று இலங்கையின் பொருளாதார பலம் சிதறிவிட்டது. சாப்பாட்டுக்குக் கெஞ்சவேண்டிய நிலைக்கு போய்விட்டது. இந்தியாவிடம் போய் மூன்று மாதத்திற்கு ஒருமுறை 500 மில்லியன் டொலர் கடனைப் பெற்று வட்டி கட்டவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. 500 மில்லியனை கட்டாவிட்டால் இலங்கையின் பொருளாதாரம் இன்னும் அழியும் இந்த அளவுக்கு மோசமான நிலையில் அரசு இருக்கின்றது.

அரசாங்கத்தை காப்பாற்றும் நிலையில் இந்தியா இருக்கின்றது. இந்தியாவுக்கு விசுவாசமாக செயல்படுகின்ற அமைப்புக்கள் இருக்கின்றன. அந்த 6 அமைப்புக்கள் இந்தியாவிடம் சென்று இன்றைய காலகட்டத்தில்தான் சொல்ல வேண்டும் - இலங்கைஅரசு உங்கள் காலில் விழுந்திருக்கின்றது. தமிழர்களுக்கு ஏதும் செய்யவேண்டும் என்றால் இன்றுதான் செய்யவேண்டும் என்று சொல்லவேண்டும். இதனையும் விட சரியான சந்தர்ப்பம் கிடைக்குமா? - இதனையும் விட ஒருபேரம்பேசல் இருக்குமா? ஆனால், அந்த ஆறு அமைப்புக்களும் என்ன விரும்புகின்றார்கள். சிங்களவர்கள் விரும்புகின்ற 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த சொல்லித்தான் கேட்கின்றார்கள்.

சம்பிக்க ரணவக்க சிங்கள - பௌத்த வெறிகொண்ட நபர். அந்த சம்பிக்க ரணவக்ககூட 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்க வேண்டும் என்று மாநாடு வைத்து தெரிவித்துள்ளார். இந்த 13ஆம் திருத்தம் எந்தளவுக்கு மோசமான விடயம் என்பதை இதை வைத்தாவது புரிந்துகொள்ளலாம். இதனை தெரிந்திருந்தாலும் நீங்கள் முகவர்கள் என்றபடியால்தான் இதனை வலியுறுத்துகின்றீர்கள். தமிழ் உணர்வு அல்லது தமிழர்களுக்குரிய அபிலாசைகளில் உங்களுக்கு விரும்பம் இருந்தால் - அதற்காக நீங்கள் ஆணையைப் பெற்றவர்கள் என்று கொஞ்சமாவது மதிப்பிருந்தால் இந்த துரோகத்தை செய்யமாட்டீர்கள்.

பேரம்பேசலை பற்றி நாங்கள் பேசும்போது இந்த இலக்கை எவ்வாறு அடையப்போகின்றீர்கள் என எங்களிடம் கேட்கின்றபோது பேரம் பேசல் ஊடாக அடையப்போகின்றோம் என்று கூற எங்களை பார்த்து நக்கலடித்தார்கள். இன்று அந்த பேரம் பேசலுக்கான சந்தர்ப்பம் கண்ணுக்கு முன்னால் இருக்கின்றபோது பேரம்பேசாமல் நேர்மாறாக இந்த இனத்தை அழிக்க விரும்புகின்ற தரப்பு விரும்பும் நிலைப்பாட்டை வலியுறுத்த விரும்புகின்றார்கள் - என்றும் கூறினார்.

## காணாமல்...

ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கொட்டும் மழையின் மத்தியிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

டிப்போ சந்தியில் கவனயீர்ப்பில் ஈடுபட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் செயலகத்துக்கான மகஜரை வேலன் சுவாமிகளிடம் கையளித்தனர்.

போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்க செயலாளர் லீலாதேவி,

இந்த போராட்டத்திற்காக பல்வேறு தரப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தோம். குறித்த அழைப்பை ஏற்று பலர் இங்கு வருகை தந்திருந்தனர். ஆனால் இன்றைய போராட்டத்தில் பொதுமக்கள் ஆதரவு தந்திருக்கவில்லை.

ஒரு சில அரசியல்வாதிகள் மாத்திரமே வருகை தந்திருந்தனர். இந்த நிலையில் பொதுமக்களுக்கு ஒரு செய்தியை நாங்கள் தருகின்றோம். இந்த போராட்டத்தில் உங்கள் பங்களிப்பு கடந்த காலங்கள் போன்று இல்லை. உங்கள் வீட்டிலும் இதுபோன்று சம்பவங்களும், காணாமல் ஆக்கப்படுதலும் இல்லாதிருக்கவும், பேரப்பிள்ளைகள், அடுத்த சந்ததிக்கு இவ்வாறு நடந்தேறக்கூடாது என்பதற்காகவுமே போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

உங்கள் வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பம் மரம் அழிக்கப்பட்டு அரச மரம் முளைக்கும்போதுதான் அதனை நீங்கள் உணர்வீர்கள். அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பும் எமக்கு போதாது. உண்மையில் இந்த போராட்டத்தை அவர்கள் முன்னின்று நடத்தியிருக்கவேண்டும். அவர்கள் தமது ஆதரவாளர்களை அழைத்து வந்து இந்த போராட்டத்தை வலுப்பெற வைத்திருக்கவேண்டும்-என்றார். (அ)

## பிரதிநிதிகளை...

மன்ற தெரிவுக்குழுவிடம் யோசனை முன்வைத்துள்ளது.

மக்களின் எதிர்பார்ப்புக்கும் சட்டத்திற்கு முரணாகவும் செயல்படும் மக்கள் பிரநிதிகளை பதவி நீக்கம் செய்யும் அதிகாரத்தை நீதிபதிகள் குழுவுக்கு வழங்கும் போது நாட்டின் ஜனநாயகம் மேலும் வலுப்படுத்தப்படும். ஜனநாயகத்தை முன்னிலைப்படுத்தி செயல்படும் பெரும்பாலான நாடுகளில் இவ்வாறான நிலைமை உள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)

## மீனவர்கள்...

பெரியவர் என்று நாங்கள் பார்ப்பதில்லை - அனைவரையும் சமமாகவே பார்க்கிறது சுதந்திரக் கட்சி.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கில் அதாவது தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றமை வரலாற்றில் ஒரு முக்கியமான விடயமாகும். இதற்கு நான் அனைத்து உடுப்பிட்டி தொகுதி மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எதிர்வரும் காலத்தில் எமது கட்சிக்கு அதாவது மாகாண சபை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போதும் எமது கட்சியை பலப்படுத்துவதற்கு அதிகளவில் மக்கள் எமக்கு ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் நாம் உங்களை நல்ல நிலைக்குக் கொண்டுவருவோம் - என்றார். (ஐ-3)

## வடக்கு - கிழக்கு...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழ் தீவிரவாத அமைப்புகளின் தலைவர்களைச் சந்தித்திருந்தனர்.

இதன்பின்னர், இலங்கையில் வடக்கே வந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் முதல் தடவையாக பேசிய தென்னிலங்கையின் அர சியல் முக்கியஸ்தராகவும் திரைப்பட நட்சத்தி ரமாகவும் விஜய குமாரதுங்க விளங்கியிருந் தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு என்றழைக்கப்பட்ட சதாசிவம் கிருஷ்ணகுமாருடன் நேர டிப்பேச்சுக்களை நடத்தி தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக அணுக முடியும் என்று நிரூபித்தவர்கூட விஜய குமாரதுங்க என்பது குறிப்பிடத்தக்கது.

அவரின் 34ஆவது சிரார்த்ததினம் நான்கு தினங்களுக்கு முன்னர் அனுஷ்டிக்கப்பட்டி ருந்தது. இந்நிலையில் புகழ்பெற்ற இந்திய தமிழ் திரைப்பட நட்சத்திரமான எம். ஜி. இராமச்சந்திரன் மற்றும் விஜயகுமாரதுங்க ஆகியோர் வடக்கு - கிழக்கு தமிழர்கள் மீது அனுதாபம் கொண்டிருந்த திரையுலக மற்றும் அரசியல் கதாநாயகர்களாகவே நினைவு கூரப்பட வேண்டியவர்களாகின்றனர்.

# இன்றும் மின்வெட்டு!

கொழும்பு, பெப். 21

இன்று திங்கட்கிழமையும் ஒன்று முதல் ஒன்றரை மணிநேர மின்வெட்டு தென் மாகாணத்தில் அமுல்படுத் தப்படவுள்ளது என்று பொது பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் மின்வெட்டு அட்டவணை அறிவிக்கப்படும் என்று ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ஐ)

# சுற்றுலாப் பயணிகளுக்கான மொபைல் செயலியை அறிமுகப்படுத்த தீர்மானம்

கொழும்பு, பெப். 21

நாட்டில் சுற்றுலாத்துறைக்காக உத்தேச உத்தியோக பூர்வ அலைபேசி செயலி இந்த ஆண்டு அறிமுகப்படுத்தப் படும் என்று சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய செயலி அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், சுற்றுலாத்துறை தொடர்பான அனைத்து இடங்களிலும் டிக்கெட் வாங்க முடியும்.

இந்த செயலி மூலம் நாட்டில் உள்ள ஹோட்டல் மற் றும் தங்குமிடங்களை முன்பதிவு செய்ய முடியும்.

அனைத்து வெளிநாட்டு நாணயங்களின் மூலமாகவும் இந்த முன்பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்பது ஒரு சிறப்பு அம்சமாகும். இந்த செயலி பயன்பாட்டிற்கு நாட்டில் உள்ள அனைத்து ஹோட்டல்களின் தகவல்களும் சேர்க்கப்படும்.

சுற்றுலா இடங்கள், ஹோட்டல்கள், உணவகங்கள், பயணத் தகவல்கள், கூகுள் மப்ஸ், தரப்படுத்தப்பட்ட சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சுற்றுலா பொலிஸ் அவசர சேவைகள் ஆகியவை இதில் அடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## ஐ. நா. மனித...

சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இந்த அறிக்கை குறித்து மார்ச் 3ஆம் திகதி மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடரில் விவாதிக்கப்படவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் ஊடாக கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்ட இந்த அறிக்கை, அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து ஐ. நா. மனித உரிமைப் பேரவையால் எழுப்பப்பட்ட பல பிரச்னைகள் குறித்து அரசாங்கத்தின் அவதானிப்புகள் மற்றும் விளக்கங்களுடன் இந்த அறிக்கை ஜெனிவாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில், சர்வதேச தரத்திற்கு ஏற்ப பயங்கரவாத தடை சட்டத்தில் மாற்றங்களை செய்ய அரசாங்கம் தவறியுள்ளமை குறித்து விசேடமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத் தடைச் சட்ட திருத்தங்கள் குறித்து அதிருப்தியையும் ஆணையாளர் முன்வைத்துள்ளார். இந்தச் சட்டம் தொடர்பாக அரசாங்கம் பலமுறை உறுதியளித்த திருத்தங்கள் அதில் உறுதி செய்யப்படவில்லை.

இது ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை பாதிக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை தற்காலிகமாக திரும்பப் பெற வேண்டும் என்று ஐரோப்பிய பாராளுமன்றம் ஏற்கனவே தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய-இலங்கை கூட்டு ஆணைக்குழு கடந்த பெப்ரவரி 8ஆம் திகதி பிரஸல்ஸில் கூடிய போது இதற்கான குறிப்பு வெளிப்பட்டது.

இதுதவிர, 2019 உயிர்த்த ஞாயிறு படுகொலைகள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முயற்சியின் விளைவாக இந்த விவகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணைகளில் சட்டமா அதிபர் சுதந்திரமாக செயற்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்களை நிராகரித்து, கொழும்பு மேல் நீதிமன்றம் அவர்களை விடுத்தமை சட்டமா அதிபர்மீதான விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. அவர்கள்மீது 855 குற்றச்சாட்டுகளை சட்டமா அதிபர் பதிவு செய்தார். ஆனால் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. (ஐ)

## நிர்வாக...

களின் செயலாளர்களுக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மகாவலி வலயத்தை அண்டிய கால்வாய்கள், மற்றும் குடியேற்றங்கள், பொது உட்கட்டமைப்பு வசதிகள், அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரின் கடிதத்திற்கு அமைவாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கடிதத்தின் 1979ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்துக்கு அமைவாக ‘மகாவலி விசேட அதிகார எல்லையாக’ பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசத்தினுள் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மிகவும் வினைத்திறனாகவும் பொது மக்களுக்கு பாதிப்பின்றி திட்டமிட்டு செயல்படுத்தும் பொருட்டு அதிகார எல்லையை சரியாக இனங்காண்பது தொடர்பில் விசேடமாக கலந்துரையாடப்படஉள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மகாவலி விசேட அதிகார எல்லையாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளின் நிர்வாக அதிகாரங்கள் மீளப்பெறப்படுகின்றபோது குறிப்பாக வடக்கு மாகாணத்தில் வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவின் அதிகாரத்தினுள் காணப்படுகின்ற காணிகள், குளங்கள், கால்வாய்கள் உள்ளிட்டவை மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டிற்குள் செல்லவுள்ளன.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்று, மணலாறு (வெலிஓயா), ஒட்டுசுட்டான் ஆகிய பிரதேசசெயலாளர் பிரிவுகளில் உள்ள காணிகள், குளங்கள் மற்றும் கால்வாய்கள், வயல்கள் உள்ளிட்டவையும் மகாவலி அதிகார சபையின் கீழ் செல்கின்றன.

மேலும், மகாவலி எல் மற்றும் மகாவலி ஜே, மகாவலி கே ஆகிய வலயங்கள் விஸ்தரிக்கப்படுகின்றபோது பொதுமக்கள் தமது நிலபுலங்களை பறிகொடுக்க நேரிடும் என்பதோடு குடிப்பரம்பலும் மாற்றப்படும் என்பதைச் சுட்டிக்காட்டி 2018ஆம் ஆண்டு முல்லைத்தீவில் பெரும் போராட்டம்முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன்பின்னர், தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் செயல்பாட்டை முன்னெடுக்க வேண்டாம் என்பதை வலியுறுத்தி அமைச்சர் சமலுக்கு கடிதம் ஒன்றை கையளித்து கலந்துரையாடினர். இதன் பின்னர், இந்த செயல்பாடுகள் கிடப்பில் போடப்பட்டன. இதன்போது, பிரதேசசெயலாளர்களின் அனுமதியின்றி எவ்விதமான காணிகள் உள்ளிட்ட விடயங்களை முன்னகர்த்த முடியாது என்றும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே, தற்போது, மாகாவலி அதிகாரசபை தனது திட்டத்தின் கீழ் காணப்படும் எல்லைகளை மீளவும் வரையறுத்து அவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருதற்கான நடவடிக்கைக்கையாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத சட்டம் நீக்கத்தில் மாற்று கருத்துக்கு இடமில்லை!

## இரா. சம்பந்தன் வலியுறுத்து



கொழும்பு, பெப். 21

பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றுமுழுதாக நீக்கப்பட வேண்டும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இட மில்லை. இந்த நிலைப் பாட்டில் நாம் அன்றும் இன்றும் உறுதியாக நிற்கின்றோம் என்று வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக் கோரும் மனுவில் இரா. சம்பந்தனும் ஒப்பமிட்டுள்ளார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "தற்போதைய பயங்கரவாதத் தடைச் சட்டம் மிக மோசமானது. அதில் திருத்தங்களை மேற்கொள்வதால் பயனில்லை. அந்தச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும். மக்களின் உரிமைகளை - சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாக்கும் வகையில் இந்தக் கருமம் ஆற்றப்பட வேண்டும்" - என்றார். (ஐ)

# 9 கைத்தறி உற்பத்தி நிலையங்களை யாழ்ப்பாணத்தில் உருவாக்க திட்டம்

## இராஜாங்க அமைச்சர் தயாசிறி

யாழ்ப்பாணம், பெப். 21

"யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் காலத்தில் 9 கைத்தறி உற்பத்தி மத்திய நிலையங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம்", என்று பற்றிக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அத்துடன், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கிராமத்து வேலைத் திட்டத்திற்காக 85 ஆயிரம் மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளார். இதில் கூடுதல் நிதி கிராமமட்டத்தில் உள்ள பெண் தலைமை குடும்பங்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படவுள்ளது. இதற்காக, அனைத்து கிராம சேவையாளர் பிரிவுகளுக்கும் 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பற்றிக் கைத்தறி உற்பத்திகளை எதிர்வரும் காலங்களில் யாழ்ப்பாணத்தில் 9 மத்திய நிலையங்களை உருவாக்கவுள்ளோம். இந்த பயிற்சிகளை பெறுவதற்காக 77 மில்லியன் ரூபாயில் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன - என்றும் கூறினார். (ஐ)

# இலங்கை தமிழர் ஊடகவியலாளர் ஒன்றியத்திற்கு புதிய நிர்வாகிகள்

கொழும்பு, பெப். 21

இலங்கை தமிழர் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக தெரிவும் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் கலாவினோதன் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஒன்றியத்தின் புதிய தலைவராக எஸ். ஸ்ரீகஜன் தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக கே.ஜெயந்திரன், உபதலைவர்களாக லியோ நிரோஷ தர்ஷன் - தர்மினி பத்மநாதன், உப செயலாளராக சு. சிவசண்முகநாதன், பொருளாளராக ப.விக்னேஸ்வரன் உப பொருளாளராக எஸ் வாஸ் கூஞ்ஞே ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகக்குழு உறுப்பினர்களாக ஆர். சிவராஜா , எஸ். அனந்த் பாலகிட்ணர் , என். ஜெயகாந்தன் , வீ. பிரியதர்ஷன் , ஆர். சேதுராமன் , கி. லக்ஷமன் சிசில் , பிரியங்கா சந்திரசேகரம் , கே.ஹரேந்திரன் , கே. பிரசன்னகுமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலும், வட மாகாண இணைப்பாளராக கணபதி சர்வானந்தா, கிழக்கு மாகாண இணைப்பாளராக எஸ். சரவணன் மற்றும் மலையக இணைப்பாளராக சிவலிங்கம் சிவகுமாரன் ஆகியோருடன் ஒன்றியத்தின் மேலதிக இணைப்பாளராக தர்மினி பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# நல்லூரில் மைத்திரிபால

யாழ்ப்பாணம், பெப். 21

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன நேற்று யாழ்ப்பாணத்தின் மதஸ்தலங்களுக்கு விஜயம் மேற்கொண்டு விசேட வழிபாடுகளை மேற்கொண்டார்.

நல்லூர் ஆலயத்துக்குச் சென்று விசேட வழிபாடுகளை மேற்கொண்ட அவர் பின்னர் ஆரிய குளம் நாக விகாரைக்குச் சென்று வழிபட்டார்.

அவருடன் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, தயாசிறி ஜயசேகர, துமிந்த திசாநாயக்க, பாரா ளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதன் உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்ட தலைவர்கள் பலரும் பங்கேற்றனர்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாடு இடம்பெறவிருக்கும் நிலையில் நேற்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர்கள் பலரும் யாழ்ப்பாணம் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# சுதந்திரக் கட்சியின் மாநாடு உடுப்பிட்டியில்

உடுப்பிட்டி, பெப். 21

சிறிலங்கா சுதந்திர கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு நேற்று யாழ்ப்பாணம் - கரவெட்டி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாநாட்டில் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரி பால சிறிசேன பங்கேற்றார்.

அவருடன், தொழில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, பற்றிக் - கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேன் ராகவன் மற்றும் சாந்த பண்டார ஆகியோரும் இதில் பங்கேற்றனர். (ஐ-3)

# சிறுபான்மை மக்களை அடக்கவே பயங்கரவாத சட்டம் பயன்படுகிறது

## சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு



கொழும்பு, பெப். 21

சிறுபான்மை மக்களை அடக்குவதற்காகவே ராஜபக்ஷகளால் பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்பட்டது - பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

அவர், பயங்கரவாத சட்டத்தை நீக்குவதற்கான மனுவில் கையொப்பமிட்டிருந்தார். இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டுக்கு எதிராக - மக்களுக்கு எதிராக பயங்கரவாதச் செயலில் ஈடுபடுவோரைத் தண்டிக்கவே பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால், ராஜபக்ஷக்களின் ஆட்சியில் சிறுபான்மை மக்களை அடக்குவதற்கே இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட்டது - பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போதைய ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்தை விமர்சிப்போரை பழிவாங்கும் வகையிலும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படுவதை நாம் காண்கின்றோம். குற்றவாளிகளைத் தப்பிக்கவிட்டு அப்பாவிகளைச் சிறையிலிடுவதற்கும் தற்போது ராஜபக்ஷக்களுக்கு இந்தச் சட்டம் துணைபோகின்றது. எனவே, இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் அல்லது தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு அது முழுவதுமாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்" - என்றார். (ஐ)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.02.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்
7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-சார்ளி சப்பின்-02,டிக்
டிக்டிக்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
6.30 மணி : நலந்தானா-வைத்தியர் கவிதா



**இரவு**
7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கா விவாத நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு